ஊனுயிர் 'நான்' உள வரைக்கும்
ஒருலகரசென்றே பாடி
மானுட நேசிப்பை வளர்ப்பேன்
மூன்பதை புன்னகை பூக்கும்!

# இருதயுகம்

## தமிழ்த் துவாசிகை

ஆடி
ஆவணி **1981 - 4**

★

**ஆசிரியர்: க. வீரகத்தி**
**280, பிரவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்,**
**இலங்கை.**

★

அவரவரின் கருத்துக்கு
அவரவரே பொறுப்பாளி;
வேண்டாதவற்றை
விலக்கிவிடும் உரிமை
ஆசிரியருக்கு உண்டு.

# தமிழ் பாட வேண்டும்

**பல்லவி**

தவத்தாலே உனைக்காண வேண்டும் முருகா — என்
தவமர்கத் தமிழ்பாட வேண்டும்.

**அநுபல்லவி**

அவமான எண்ணங்கள் அழிக்காத வண்ணம்—புது
நவமான சிந்தனைகள் மலர்கின்ற வண்ணம்
தவத்தாலே உனைக்காண வேண்டும் முருகா—என்
தவமாகத் தமிழ்பாட வேண்டும்.

**சரணம்**

விலைபோக முடியாத சரக்கெல்லாம் வீசி
வீதிக்கு வாராத நுட்பங்கள் பேசி
அலைமேலே அலையாகத் தமிழ்பாட வேண்டும் — அந்த
ஆனந்த வெள்ளத்தில் நீயாட வேண்டும்.

பொன்னான உன்னெழிலிற் புதுமைபல கண்டு
புலமைக்கு விருந்தாக நானூட்ட வேண்டும்
என்னாவி யுளவரைக்கும் நின்னாலே முருகா - மிக
எடுப்பாகக் கிருதயுகம் நான்பாட வேண்டும்!

தவத்தாலே உனைக்காண வேண்டும் முருகா — என்
தவமாகத் தமிழ்பாட வேண்டும்.

●

''கலியுகத்தின் கெடுபிடிகள் சாடவேண்டும்
கவிதையதற் காயுதமாய் அமைய வேண்டும்.''

கவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோகவனத்தில் 'சீதை'

வனவிலங்குகளுக்கும் பாதுகாப்பு உண்டு. அதற்காக வெளிநாட்டு நிபுணத்துவ ஆலோசனை; பல இலட்ச ரூபா செலவு. அவற்றைக் கொலைப்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமும் ஆகும்.

காடுகளில் துள்ளியாடும் புள்ளிமானும் மரையும் பட்சி ஜாலங்களும்கூட நவீன வேட்டுவர்களின் குண்டு பாயும்வரை மரண பயம் அற்று மகிழ்ச்சிகரமானவையாகக் கூடிக் குலாவி வாழுகின்றன.

எறும்பை மிதிப்பதே பாபம் என்ற ஜீவ காருணிகள் 'செங்கோல்' செலுத்தும் இந்த நாட்டிலோ தமிழினம் என்னும் மானுட ஜாதி உயிராபத்து, உடமைநாசம், மானஈனம்—''இப்பவோ பின்னையோ இரவிபடு நேரமதிலோ, எப்பெப்பவோ'' என்ற ஏக்கத்தில்— திக்குத்திசை தெரியாத அந்தகாரத்தில் மூழ்கி, சோகமயமாக, பயப்பிராந்தியில் காலம் தள்ளுகிறது— தள்ளிக் கொண்டேயிருக்கிறது.

இந்தநாடு அந்நிய ஆதிக்கத்தில் இருந்து விடுபட்ட நாள்தொட்டு இலங்கைத் தமிழ்த் தேசிய இனம் என்னும் 'சீதை' சிறைப்படுத்தப்பட்டு விட்டாள்! அராஜகக் காவலாளிகளின் மத்தியில், நல்லகனவு கண்டு நடக்கப்போவது சொல்லும் 'செஞ்சடை'யும் இருக்கத்தான் செய்கின்றாள் 'செஞ்சடை'யின் கனவு காரியப்படுவது என்றோ? 'சீதை' விடுதலைப்பள்ளுப்பாடுவது என்நாளோ? (விடுதலை வேறு, பிரிவினை வேறு)

பட்டம் பதவி மோகிகளாலும் அங்கே தேனிலவும் இங்கே இடிமுழக்கமும் மின்னவிடும் 'கல்யாணராமர்' களாலும் 'சீதை'க்கு மீட்சி இல்லை. முதலாளித்துவ தரகர்களாலும் அது சாத்தியமாகாது. சதாநேரமும் 'கோட்டுக்குள்' கோட்டைவிடும் சட்டத்தரணிகளால் எந்த நாடோ இனமோ விடுதலை பெற்றதற்குச் சரித்திரமே இல்லை.

வேறுயாரோ 'சீதை'யை மீட்பது?

''எல்லாரும் எல்லாப்பெருஞ்செல்வமும் எய்தலாலே, இல்லாரும் இல்லை உடையாரும் இல்லை''; ''வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்'' என்று கம்பன் பொதுவுடமைப் பூமியாகக் காட்டும் அயோத்திக் கோதண்ட இராமனாலேதான் ஜானகி சிறை மீண்டாள், விடுதலை கண்டாள்.

அயோத்தி இராமன் இனிவருவது சாத்தியம் இல்லை. 'சீதை' தன்னைத்தானே இராமனாக மாற்றி விடுதலை காண்பதே விமோசனத்திற்கான ஒரேயொரு மார்க்கமாகும். 'சீதை' அது செய்வாளா?

அரிசிப்பொரியொடு திருவாரூர் போல் ஈழமாதாவும் முதலாளித்துவக் கோரப்பிடியிலிருந்து விடுதலை பெற்றுவிடுவாள்! கலி அழியும், கிருதம் கிளைக்கும்!

— ஆ-ர்

---

''எந்தையும் தாயும் மகிழ்ந்து குலவி
இருந்ததும் இந்நாடே — அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் தவழ்ந்து
முடிந்ததும் இந்நாடே''

— பாரதி

* * *

**1981—**

ஆடித்திங்கள் முதல்நான்கு தினங்களில்
அரிவையரோடு ஆண்களும் சேர்ந்து
கோடியை நோக்கி இரவிர வாகத்
'தவண்டது' எம்நாடே — தமிழர்
துவண்டதும் எம்நாடே!

கவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமலை சரிந்தது

— சிவா சுப்பிரமணியம் —

இலங்கையில் இடதுசாரி இயக்கத்தின் பிதாமகர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்ஹ அமரராகிவிட்டார். அன்னாரின் அரை நூற்றாண்டு கால அரசியல் வாழ்க்கை அரசியலில் அடியெடுத்து வைப்பவர்கள் படித்தறிய வேண்டிய ஒரு வரலாறாகும்.

1931-ம் ஆண்டு நடைபெற்ற முதலாவது சட்ட சபைத் தேர்தலில் மொறவாக்க தொகுதியின் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டுத் தனியொருவராக ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தைச் சட்டசபைக்குள் நடத்தினார். நீர்ப்பாசனம், விவசாயம் போன்ற விடயங்களில் அவர் முன்வைத்த கருத்துகள் அத்துறைகளைச் சார்ந்த அறிஞர்களால் வெகுவாகப் பாராட்டப்பட்டுள்ளன. இவர் முதலில் லங்கா சமசமாஜக் கட்சியினதும், பின்னர் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியினதும் ஸ்தாபக அங்கத்தவர் நோய்வாய்ப்பட்டுச் சிகிச்சைக்காக மாஸ்கோ செல்லவிருந்த வேளையிலும் தொழிலாளர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கத் தவறவில்லை. உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வேலை நிறுத்தக் காரரைச் சென்று பார்த்து அவர்களுக்கு ஆசி கூறிய பின்னரே சிகிச்சைக்காகச் சென்றார்.

மாற்றுக் கட்சிக்காரரும் மதித்துக் கௌரவிக்கும் ஒரு பண்பாளனை — நேர்மையான அரசியல் வாதியை ஈழமாதா இழந்துவிட்டாள்.

கடந்த அரை நூற்றாண்டாக எதற்காக அவர் போராடினாரோ அதற்காகத் தொடர்ந்து போராடுவதே அன்னாருக்குச் செலுத்தும் அஞ்சலியாகும். மற்றன எல்லாம் பச்சைப் 'புலுடா' ஆகவே முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதொன்றும் தெரியாது

முருகையன்

உலக அரங்கில்...
ஒரு மூலையிலே நின்றபடி
மூத்தண்ணர்ப் பிள்ளை
முழங்குகிறார், இவ்வாறு—

—பேரன்பு மிக்க பெரியோரே!
நண்பர்களே,
ஆதரவு தந்திடும் தோழர்களே,
கேளுங்கள்,
எந்த ஒரு பாதகமும் நாங்கள் புரிவதில்லை
எங்கள் இனிய இளையதம்பிமார் எல்லாம்
சும்மா குழப்படியாய்க் கோள் மூட்டுகின்றார்
[கள்.

நாங்கள் தருமர்
நலஞ் செய்யும் கூட்டத்தார்
தீங்கு நினைப்பதில்லை;
செய்து முடிப்பதில்லை
வீடு கொளுத்தி விளையாட்டுப் பார்ப்பதில்லை
டப்பா பலநிறைந்த எண்ணெயினை ஏற்றியபி
பக்கென்று பற்ற நெருப்பை எரிப்பதில்லை [ன்
பட்டுக் கடையும் பலசரக்கு மாளிகையும்
சப்பாத்துக் கூடமும் சாய்ப்பும் மடுவமும்
பேப்பர் அலுவல் அகமும்
பெரிய பெருஞ் சோடாக் கடையும்
சுரண்டும் விறண்டியுள்ள போத்தல் அடுக்
பொன்னீர்த் தவறணையும் [கினை
மோதி இடித்தோ உடைத்தோ முடிப்பதி
தீ வைத்து நின்று சிரிப்பதில்லை [ல்லை
தீ எரியும் வேளையிலே
நாங்கள் பயிலா படிப்பதில்லை
ஆடுவதுமில்லை

அதொன்றும் தெரியாது.

நூலகத்தின்மேலே நெருப்பும் இடுவதில்லை
பால் சிறிது தந்தாற் பருகுவோம்
அல்லாமல்,
வேறு குடிகள் விரும்போம்
வெறி அறியோம்:

தாடிக் கிழவர், தலை நரைத்த பாட்டிமார்,
வேடிக்கைக் காரப் பொடியன்கள்போல்
ஏதும் கல்லுருவம் கண்டால்...
கடப்பாரை கொண்டுபோய் ஓங்கி அடிப்பதி
உண்மையாய்ச் சொல்லுகிறோம்— [ல்லை
நாங்கள் சிலையே உடைத்துக் கெடுப்பதில்லை

ஆட்சுட்டு, வீதி அருகில் எறிவதில்லை

நாங்கள் தருமர்
நலஞ் செய்யும் கூட்டத்தார்.

எங்கள் இனிய இளையதம்பிமார் எல்லாம்
தம்மால் இயன்ற தடைகள் விதிக்க எண்
சும்மா குழப்படிக்குக் [ணிச்
கோள் மூட்டுகின்றார்கள்.

## 2

மூத்தண்ணர்ப்பிள்ளை
முடிக்கும் தறுவாயில்,
சின்ன இளையதம்பி
அங்கு தலைகாட்டவும்...
காதை முறுக்கி,
கழுத்தில் அடிபோட்டு,
பொத்திய கைகளாற் குட்டி,
பிளேட்டாலே மூக்கை அரிந்து,
முழிசினார் மூத்தண்ணர்.

பின்னர்...
இளையவனைத் தேற்றிவிட முற்பட்டார்
கட்டித் தழுவி
கதிரை கொடுத்து,
இருத்தி,
நாடி தடவி,
நயமான சொற்பேசி,
காலே அரைக்கால் அவுன்சு பச்சைத் தண்
கொண்டுவந்து தந்து [ணீரைக்
குளிர்ந்து
முறுவலித்தார்.

எல்லா உலகும் இதைப்பார்த்து நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன உலகும் இலக்கிய உணர்வும்

— க. கைலாசபதி

**பா**ரதியாரின் நூற்றாண்டு விழாவைத் தமிழுலகம் எதிர்நோக்கியிருக்கும் இவ்வேளையில், நவீன இலக்கிய வளர்ச்சியைப் பின்னோக்கி மதிப்பிடுதல் சாலப்பொருத்தமாகும். அந்நியர் ஆட்சிக்காலத்திலேயே நமது இலக்கியம் சமுதாயப்பார்வை பெற்றது. அந்நிய ராட்சியின் பாதிப்புக்களை நோக்கி எழுந்த இப்பார்வை அடிப்படையில் மூன்று வகையாகச் செயற்பட்டது. இம்மூன்று நோக்குகளும் ஏறத்தாழ இன்றுவரையில் நமது சமுதாயத்திலும் அதன் விளைபொருள்களில் ஒன்றான இலக்கியத்திலும் உந்துசக்திகளாய் இருந்து வருகின்றன.

மேனாட்டு நாகரிக முறைகளையும் இலக்கிய இயக்கங்களையும் போக்குகளையும் அப்படியே பின்பற்ற முனைதல் முதலாவது போக்காகும்; மேனாட்டு நாகரிக முறைகள், பண்பாட்டுக் கூறுகள் என்பனவற்றை முழுமையாக நிராகரித்து அயல்வாவற்ற, தனிப் பிறந்த அடிப்படைகளை விடாப்பிடியுடன் கைக்கொள்ளுதல் இரண்டாவது போக்காகும். அந்நியராட்சியின் விளைவாகவும் மேற்புலகத் தொடர்பாலும் வந்து சேர்ந்த சில பல நாகரிகக் கூறுகளையும் திணைப்பிறந்த பண்பாட்டுக் கூறுகளையும் ஒன்றிணைத்துச் சமரசமும் அமைதியும் காணுதல் மூன்றாவது போக்காகும். பின்பற்றல், மறுத்தல், ஒன்றிணைத்தல் என இம்மூன்று செல்நெறிகளையும் சுருக்கமாக விவரித்தல் பொருந்தும். இவையே நவீன தமிழ் இலக்கிய கதியைப் பாதித்து வழிநடத்தும் பிரதான போக்குகள் எனக் கருதலாம்.

சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியளவில் தொடங்கி இன்றுவரை இம்மூன்று அடிப்படைப் போக்குகளுமே விகற்பங்களுடனும், வண்ண வேறுபாடுகளுடனும் இலக்கியத்தில் உருவரையறை செய்யும் காரணிகளாய் இருந்து வருதல் கண்கூடு. நல்லைநகர் ஆறுமுகநாவலர், இராமலிங்க சுவாமிகள் முதலிய புலவர் பெருமக்களிலிருந்து இன்றைய 'புதுக்கவிதை' எழுத்தாளர்கள் பரியந்தம் எந்த ஒரு தனி நபரையோ அல்லது இலக்கியக் குழுவினரையோ எடுத்து நோக்கினும், அவர்கள் இம்மூன்று போக்குகளில் ஒன்றினையோ ஒன்றுக்கு மேற்பட்டவற்றையோ சார்ந்தவர்களாகவே இருக்கக் காணலாம்.

இன்னும் சொல்லப்போனால், கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவில் முகிழ்த்த முக்கியமான மூன்று சமய இயக்கங்களை ஆராய்ந்தாலும் இவ்வுண்மை உறுதிப்படும். கிறித்துவ தனியொருமைக் கோட்பாடு, ஐரோப்பிய தாராளக் கொள்கை, ஆங்கிலக் கல்வி முதலிய அம்சங்களினால் ஈர்க்கப்பட்டு அவற்றைப் பெருமளவிற்குப் பின்பற்றிய பிரமசமாஜத்தினரை முதலாவது பிரிவினர்க்குச் சிறந்த உதாரணமாய்க் காட்டலாம். ஒரு விதத்தில் பிரமசமாஜத்திற்கு எதிர் விளைவாக, பரமதக் கோட்பாடுகள், நாகரிகக் கூறுகள், பண்பாட்டுச் சின்னங்கள் ஆகியவற்றை முற்றாக மறுத்தும் அந்நியராட்சியை உள்ளூர வெறுத்தும், தமது பாரம்பரியத்திலுள்ள சிந்தனைகளையும் நம்பிக்கைகளையுமே பிரதானப்படுத்திப் பிரசாரஞ்செய்த ஆரிய சமாஜத்தினரை இரண்டாம் பிரிவினருக்குச் சிறந்த காட்டாகக் கொள்ளலாம். வடக்கே தோன்றிய தயானந்த சரஸ்வதி *(1824—1883)* முதல் நல்லூர் நாவலர் *(1822—1879)* வரை மீட்டுயிர்ப்புக் குரல் எழுப்பிய அனைவரும் இப்பிரிவில் அடங்குவர். சபாபதி நாவலரிலிருந்து இன்றைய நவ தொல்காப்பியவாதிகள் வரை இத்தகைய மீட்டெழுச்சிக் குரலையே இலக்கிய உலகில் ஒலிப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய இருமுனைப் போக்குகளுக்குச் சிறிது வேறுபட்ட முறையில் எங்கும் எதிலும் காணப்படும் விழுமிய அம்சங்களைத் திரட்டி, ஒன்றிணைத்தலையும் இயைபு காண்டலையும் உன்னதமான வாழ்க்கைத் தத்துவமாகவும் சமய நெறியாகவும் உருவாக்கிய இராமகிருஷ்ண மடாலயத்தினரை மூன்றும் பிரிவினருக்குத் தகுந்த எடுத்துக்காட்டாய்க் கருதலாம். இம்மூன்று போக்குகளும், முறையே ராஜாராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி, இராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஆகிய மூவராலும் சிறப்பாகச் சமயத் துறையில் தோற்றுவிக்கப்பட்டனவாயினும், பின்பற்றல், மறுத்தல், ஒன்றிணைத்தல் என்னும் பண்புகள் இலக்கியம் முதலாய சகல துறைகளுக்கும் பொருந்துவனவாய் உள்ளன.

இவை ஆய்வு வசதிக்காக வேறுபடுத்திக் கூறத்தக்க போக்குகளாய் இருப்பினும், நடைமுறையில் பல இலக்கிய கர்த்தர்களின் ஆக்கங்களில் விரவிக் காணப்படுவதும் உண்டு. அதுமட்டுமன்று. இம்மூன்று பண்புகளில் ஒன்றை மாத்திரம் சார்ந்து பற்றிக்கொள்ளும் எழுத்தாளர்கள் நமது யுகத்தின் ஆற்றல் மிக்க எழுத்தாளராய் அமைந்து திகழ்ந்ததும் இல்லை. மீட்டுயிர்ப்புக் கொள்கையை நாவலர் பின்பற்றினார். வைதிகத்தை வைராக்கியத்துடன் கடைப்பிடித்தார். தமிழோடு சைவமும் சேர்ந்தே செழித்து வளருதல் வேண்டும் என நம்பினார், பிரசித்திபெற்ற பரசமயக் கோளரியாயும் விளங்கினார். அந்த வகையில் தயானந்த சரஸ்வதியை நிகர்த்தவர் நாவலர். ஆயினும் தனது சொந்த மதத்திலும் சமயச்சடங்குகளிலும் காணப்பட்ட பல பண்புக் கேடுகளையும் சீர்கேடுகளையும் நீக்கியே புத்துயிரூட்டும் பணியை நிறைவேற்ற முடியும் என்பதை உணர்ந்திருந்தார். ''யாழ்ப்பாணச் சமயநிலை'' என்ற கட்டுரையில் இவ்வுணர்வைக் கண்டு தெளியலாம். இதனைக் கவனிக்கும் பொழுது நாவலர் மீட்டுயிர்ப்பு வாதியாயும் சீர்திருத்தவாதியாயும் இயங்கியதைத் தெளிந்து கொள்ளலாம். திரு. வி. கல்யாணசுந்தரரை எடுத்துக்கொண்டால், சமய சமுதாயத்துறைகளிலே பல சீர்திருத்தங்களை எடுத்துரைத்த அதேவேளையில் சித்தாந்தம், வேதாந்தம், வள்ளுவம், காந்தீயம், மார்க்சீயம் முதலியவற்றை ஒன்றிணைத்துச் சமரசம் காணவும் அவர் விழைந்தமையைக் காண்கிறோம். சி. என். அண்ணாதுரை அவர்களை எடுத்துக்கொண்டால் பகுத்தறிவு, நாத்திகம், வைதிக மறுப்பு, வருணாசிரம எதிர்ப்பு முதலியவற்றை வலியுறுத்தி இயக்கம் நடத்திய சீர்திருத்தவாதியாய்த் தோற்றமளித்த அவர், பழந்தமிழ்க் கொள்கைகளையும் நாகரிகத்தையும் மீண்டும் நிலைநாட்ட விரும்பிய மீட்டுயிர்ப்புவாதியாயும் இயங்கினார் என்பது மறுக்க இயலாத தொன்றாகும். உண்மையில் இருபதாம் நூற்றாண்டிலேயே மார்க்சீயம் தமிழில் பயிலத்துவங்கிய பின்னரே மேற்கூறிய மூன்று செல்நெறிகளினின்றும் விடுபட்டு வரலாற்றுணர்வுடனும் இயக்கவியல் அடிப்படையிலும் பிரச்சினைகளை நோக்கி நடைமுறைக்குத் தேவையான மார்க்கங்களைக் கூறும் போக்கு ஓரளவு வளர்ந்து வந்திருக்கிறது.

இலக்கியத்துறையை குறிப்பாக சிருஷ்டி இலக்கியத்தை ஆராயும் பொழுது இவ்வுண்மையைக் கண்டுகொள்ள அதிக நேரம் செல்லாது. உதாரணமாக, நமது நவீனர்களில் ஒருவராய் விளங்கிய பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளையை எடுத்துநோக்கினால் ஒன்றிணைக்கும் நோக்கும் போக்கும் அவரிடத்துக் காணப்படும் யாழ்ப்பாண சுவதேசக் கும்மி என்ற நூதனமான படைப்பில் மரபுவழிவரும் மதிப்பீடுகளுக்கும் புதிய ஆசாரங்களுக்கும் இடையே தோன்றும் முரண்பாட்டைக் காண்பதோடு, அதற்குப் பரிகாரம் காண முற்பட்டமையையும் அவரது எழுத்துக்களிற் காணலாம்.

> சிற்சில ஐரோப்பிய பழக்க வழக்கஞ்
> சிறந்ததென் பதற்காட் சேபமில்லை
> முற்சிந்தனையின்றி நந்தேசா சாரங்கள்
> முற்றும் விடலாமோ?
> எம்முன்
> நல்லாயிருக்கும் பழக்க வழக்கத்தை
> நாம் விடலாகாது.

என்று பாவலர் பாடுகையில் அவரது இலக்கிய நோக்கின் அடிப்படை வெளிப்படையாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் சுப்பிரமணிய பாரதியாரின் கவிப்படைப்புக்களிலேயே இப்போக்குகள் மூன்றையும் வெவ்வேறு அளவிற் காணக்கூடியதாய் இருக்கிறது. முரண்பாடுகளின் பிரதிபலிப்பே மேற்கூறிய செல்நெறிகள். அதேசமயத்தில் சிருஷ்டிகர்த்தா முரண்பாடுகளை நேர்மையாகப் பிரதிபலிக்கும்பொழுது ஒன்றையொன்று ஈர்த்தும் எதிர்த்தும் தழுவியும் மறுத்தும் நிற்கும் வலித்திழுப்பு நிலையிலேயே முரண்பாடுகள் சங்கமமாகும் அபூர்வ ஆற்றல் பிறக்கிறது. உயர் இலக்கியம் இத்தகைய சங்கம நிலையிலேயே உண்மையின் நாதத்துடன் பிறக்கிறது.

குருட்டுத்தனமான ஆங்கிலக் கல்வியைப் ''பேடிக்கல்வி'' என்றும் ''ஊனர்கல்வி'' என்றும் ஒருகணம் கண்டிக்கும் கவிஞர் மறுகணம் ''சென்றிடுவீர் எட்டுத்திக்கும்; கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்'' என்றும், ''புத்தம் புதிய கலைகள் பஞ்சபூதத்தின் நுட்பங்கள் கூறும், மெத்த வளருது மேற்கே'' என்றும் கூறினர். ஒரு பரிமாண இலக்கியம் அல்ல பாரதி இலக்கியம்.

நவீன உலகிலே, குறிப்பாக விஞ்ஞானமும் கைத்தொழிலும் உலகை எத்தனை யோவழிகளில் பிணைத்து இணைக்கும் யுகத்திலே, கிழக்கு—மேற்கு, பழமை—புதுமை, ஆன்மீகம்—அறிவியல், முதலாய பல்வேறு தளங்களிலிருந்து முரண்படும் போக்குகள் எழுவது இயல்பே. அது புறநிலை நிகழ்வு. அவற்றை ஏற்று இனங்கண்டு, அவைக்கேற்ற அகநிலை உணவினை உருவாக்கிக் கொள்வதே நவீன இலக்கியத்தின் இன்றியமையாத் தேவையாயுள்ளது. அத்தேவையைப் பெர்ருளுணர்வுடனும், கலைநுணுக்கத்துடனும் நிறைவேற்றும் இலக்கிய கர்த்தாக்களே ஆற்றல் நிறைந்தோராகக் கணிக்கப்படுகின்றனர். ஏனையோர் க்ஷணப்பித்த அலைகளினல் எறியப்பட்டு அடிபட்டுச் செல்வோரேயாவர். ★

---

# ஆலயம் தொழுவது சாலவும் நன்று —— கவி.

ஆலயம் தொழுவது மிகவும் நல்லது என்ற வாசகம் ஆலயவழிபாட்டிற்கு முன்பு செய்யவேண்டிய நல்ல, மிகநல்ல செயற்பாடுகளை உள்ளடக்கி நிற்கின்றது. வரிசைப் படுத்தினல் பின்வருமாறு அமையும்.

(1) நல்லது (2) மிக நல்லது (3) மிகவும் நல்லது.

நல்லது செய்தபிற்பாடு மிகநல்லதைச் செய்தல் வேண்டும். மிகநல்ல காரியத்தின் பின்பு மிகவும் நல்லகாரியத்தை ஏற்றல் வேண்டும். இவ்வரிசைக்கிரமம் இல்லையேல் ஆலயம் தொழுவது மிகவும் நல்லது ஆதல் எப்படி? வரிசைப்படி சிந்திப்போம்:

**நல்லது எது?** நேர்மை நியாயம் நிதானம் தவருமல் ஒருவன் வாழ்ந்து, ஏனையவர்களும் அவ்வாறே சீவிப்பதற்குச் சிறு குந்தகம் தானும் விளையாமல் அவன் வாழ்வது நல்லது எனலாம். ''நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும் அல்லது செய்தல் ஓம்புமின்'' என்று பாடுகின்றது சங்ககாலம். மற்றவர்களுக்கு நல்லது செய்ய வல்லபம் இல்லாவிட்டாலும் தீமை புரிதலையாவது தவிர்த்துக் கொள்ளுங்கள் என்பது இப்பாடற் பகுதியின் பொருள். இது நல்லது.

**மிகநல்லது எது?** இதயமற்ற மனித மந்தைகளால் உழைக்கும் மானிடங்கள் படும் அவலங்கண்டு நொந்தும் வெந்தும் தன் சுகபோகங்களையெல்லாம் தியாகம் செய்து, மனிதப்பிறவி அனைத்தும் சரிநிகர் சமானமாக வாழும் ஓர் ஆரோக்கிய சமதர்ம சமுதாயத்திற்காக, எதிர்நோக்கும் எவ்வித இன்னலையும் அவமதிப்பையும் துச்சமென மதித்து அல்லும் பகலும் ஒருவன் செயற்படுவது மிக நல்லது ஆகும்.

நல்லதும் மிகநல்லதும் செய்தபிற்பாடுதானே ஆலயம் தொழுவது மிகவும் நல்லது ஆகும் அல்லவா?.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதாரணக் கொக்கில்லை

ஒளியுமொரு விளையாட்டு வெளியிலோடுமொரு விளையாட்டு
மண்குடங் கரும்பால் நிறைந்து தானிருந்தது,
அன்பு உணவு முத்தம்
இதெல்லாம் துர்வாசனுக்குக் காண்பித்த அன்னப்புள்.

பாதி வரம்பில் பாதி வயலில்
சறுக்கும் வளைக்கும் என்னென்ன செய்யும்
குருவியுடன் போட்டிக்குக் கிசுகிசுத்தான்
பருந்து, சாதாரணக் கொக்கில்லை
சதா ஆடுங் கொக்கு தாவரபோசனம் மாத்திரம்.

வட்டங்கள் போட்டு உடைந்தன
கரும்பு கணக்காய்ப் புளித்திருந்தது
மது.

வீட்டு வாசலில் புல்லாந்தி காய்ந்த காயம்,
மறுமொழி தெரியாக் கணக்குகள், சகல சர்வம்,
மணிக் கணக்கில் தோய்ந்தன
சூரியன் வெலவெலத்துப் போனான்.

வறுமையையுஞ் சூறையாடியது
கதைகள் சுருங்கும் காலம் பிரசவிக்கும்
மலடானால் நட்டமுமில்லை.

— சேந்தன்.

---

'' **கவிதை** — ஒரு நாடகம், ஒரு தொடர்கதை, ஒரு சிறுகதை போல் வெகுஜனத் தன்மை (Mass media) கொண்டதல்ல என்கிற கருத்து இலக்கிய வட்டத்தில் இதுவரை பேசப்பட்டு வந்ததும், இதன் காரணமாகவே இலக்கியப் பத்திரிகைகள் கவிதைக்கு இடமளிக்க மறுப்பதுமான எனது காலத்து நிகழ்ச்சிகள் முடியும் நிலைக்கு வந்துவிட்டது. தமிழ் மக்களது வாழ்வில் கவிதை என்பது சகலமுமாய் இருக்கிறது. அவர்கள் தம் உழைப்பின் உபாதைகளை மறப்பதற்கும், உணர்வுகளை வெளியிடுவதற்கும் கவிதையை மட்டுமே பயன்படுத்துகிறார்கள். கவிதையைப் புறக்கணிக்கிறவர்கள், கவிதையின் சர்வ வியாபகத் தன்மையை மறுக்கிறவர்கள் சகலரையும் நான் கண்டிக்கிறேன். கவிதையின் சர்வ வியாபகத் தன்மையை நான் பிரகடனம் செய்கிறேன்.

— ஏ. தெ. சுப்பையன்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# ரஞ்சனி அழியத்தான் வேண்டுமா?

— ஊரி —

"ரஞ்சனி, நீ உன்ர வாழ்க்கையோடை விளையாடிருய்" யன்னலுக்கும் அப்பால் தெரிந்த மாமரத்தையோ, வாழையின் அழகையோ, வானத்தின் செம்மையையோ நோக்காது சூனியத்தைப் பார்த்துக்கொண்டிருந்த ரஞ்சனியின் கண்களிலிருந்து நீர் பொலபொலவென்று ஓடியது.

கேட்டவள் பல்கலைக்கழகத் தோழி வசந்திதான் .. ஒரு பக்கம் துன்பம் துயரம் விம்மல்... ஒருபக்கம்... சீ... இப்படி...நம்பிக்கைத் துரோகத்துக்கு ஆளாகிவிட்டேனே என்ற ஆதங்கம் ...

வசந்திகூட மனதைப் புரிந்துகொள்ள முடியாத நிலையில் ... எப்போதுமே இருவரும் இரு வேறு திக்குகள்தான் ... ஆனால், ஏதோ இருவரும் நண்பிகள்...எது இணைத்து வைத்ததோ ... கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

"நீயே முடிவையும் எடுத்துவிட்டு நீயே அழுதுகொண்டிருந்தா ... என்ன முடிவு?" வசந்திதான் உலுப்பினுள்.

"வேறை என்ன முடிவெடுக்கிறது ... நீயே சொல்லு" ரஞ்சனிதான் கேட்டாள்.

"விசர்த்தனமான முடிவைத்தான் நீ எடுத்திருக்கிருய் எண்டது என்ர அபிப்பிராயம்" வசந்தி சொன்னுள்.

வசந்தி!... அவள் குரல் ஓங்கி ஒலித்தது.

நீ ... நீ ... அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை... நினைவுகள் பின்னேக்கி ஓடின.

சாந்தன் தற்செயலாகத்தான் அவளைச் சந்திக்க நேர்ந்தது ... பல்கலைக்கழக மேடை ஒன்றில் தீவிரமான அரசியல் வாதியான அவனது கருத்துகள் எல்லார் மனதையும் சிந்திக்க வைத்தன:- "ஏழ்மை, சீதனம், சாதி இவற்றுக்கெல்லாம் முடிவு அதற்கு ஒரு பொதுவுடமைச் சமுதாயந்தான் ... இதை அழித்து ஒழிக்க நாம் பாடுபட வேண்டும்."

இவை அவன் எந்த மேடையில் ஏறினுலும் கூறும் கூற்றுகள். பெண்மையைப் பற்றி அவன் கொண்டிருந்த கருத்துகள் விசாலமானவை. "மாதர்தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொழுத்துவோம்" என்ற பாரதியின் வரிகள் அவனது தாரக மந்திரம் மாதிரி.

யாழ்ப்பாணத்துப் பெண்கள் வெளியே வரவேண்டும்.

சமூகத்தைப் பற்றிச் சிந்தனை செய்ய வேண்டும்.

ஆணுடன் பெண் சரிநிகர் சமானமாக வாழவேண்டும்; உழைக்கவேண்டும்.

வெறுமனே காதலுக்காக, குடும்பத்திற்காக சுயநலத்திற்காக வாழ்வதை விட்டு நாட்டைப்பற்றிச் சிந்திக்கவேண்டும்.

இவை அடிக்கடி அவன் கூறும் — வீராவேசமாகப் பேசும் வார்த்தைகள்.

"வேலை நிறுத்தத்தில் பங்கு கொள்ள வேண்டும். பெண்கள் பொம்மைகளல்ல. அழகியல் பொருட்களல்ல. ரசிப்பதற்கும் அழகுபார்ப்பதற்குமே உரியவர்களல்ல."

இவையெல்லாம் அவன் கூறும் மற்றவரிடம் கதைக்கும்போது அறிவுறுத்தும் வார்த்தைகள்.

ஏற்கனவே எமது பெண்கள்பற்றி, எமது சமூகம்பற்றி, அதனது பூர்ஷ்வா சிந்தனைகள்பற்றி மனம் வெந்துகொண்டிருந்த அவளுக்கு அவனது வார்த்தைகள் அவளது சிந்தனைகள் காரணமாக ஒரு ஈடுபாடு ஏற்பட்டது. அவனுடனே இதைப்பற்றிக் கதைப்பதில் இதற்கான முடிவுகளைப்பற்றிச் சிந்திப்பதில் நேரம் தெரியாமல் உரையாடியதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுமனே பெண்களை அழகுப் பதுமைகளாக நோக்கும், அழகு ராணிகளாக நோக்கும், குடும்பத்திற்குள்ளேயே அடங்கிஇருக்க வேண்டும் என எதிர்பார்க்கும், மற்ற ஆண்களுடன் பெண் கதைக்கக்கூடாது என எதிர்பார்க்கும், தன்னைவிட அவள் படிக்கக் கூடாது என எதிர்பார்க்கும், தான் எத்தனை பெண்களுடனும் கதைக்கலாம், தன் மனைவி/காதலி மற்ற ஆண்களுடன் சிரித்துப் பேசக் கூடாது என எதிர்பார்க்கும் ஆண்களுள்ளே ........

இவன்... விடிவெள்ளியாகத் தெரிந்ததில் வியப்பில்லை... தொடர்ந்தும் கதைத்துப் பேசியதில்... புதிய உறவொன்றை அவனிடம் பெற்றுள் அவள்...

ஆனால்... அவள் சாதாரண யூனியர் மாணவி ரஞ்சனி என்ற நிலையிலிருந்து அவனின் காதலி ... என்ற நிலையை அடைந்த போது ...

முன்னம் அவனிடமிருந்த சமூகசிந்தனைகள் எல்லாம் ... எங்கோ ஒளிந்துவிட்டன. அவையெல்லாம் வேஷமோ ... அவள் அப்போதுதான் யோசித்தாள். ஆனால், நம்பிக்கையீனப்படவில்லை.

"சாந்தன், இண்டைக்கு ஸ்ட்ரைக்காம் 10 மணிக்கு.

"சும்மா விசரன்கள் ஸ்ட்ரைக் அடிப்பான்கள்...அவன்களின்ர கதையைக் கேட்டு நீ அங்கை முன்னுக்குக் கோஷம் போடப் போகாம போய்ப் படி.."

கேட்ட அவளுக்கோ தன் காதுகளையே நம்பமுடியவில்லை.

"சாந்தன், நீங்களா?" கேள்விக் குறியுடன் நிமிர்ந்தாள் அவள்.

"அங்கை போய் கூட்டத்திலை நாலு கதை பேசுவங்கள், இருப்பங்கள் ... அதை விட்டிட்டு, படிக்க விருப்பமில்லாட்டா றூமுக்குப் போ"

"சாந்தன்!" குரல் தீனமாக ஒலித்தது.

"நீங்களா சாந்தன் சொல்கிறீங்கள்? மாணவர் எல்லாருமேதானே இதுக்குப் பொறுப்பு...நீங்களே இப்படிச் சொன்னால்" — மெலிதாகக் கேட்டாள் அவள். அவன் பார்வை நெருப்பைக் கக்கியது.

"சொன்னால் சொல்கிறதைக் கேள் — விசர்க்கதை கதைக்காதை" ஏதோ தாலி கட்டியவன்மாதிரி அவனது பேச்சுகள் வெளி வந்தன.

அவள் நெஞ்சு ரணகளமாகியது. சீதனம் பற்றி கவிதையால் அடித்த சாந்தன்— சாதி பற்றி மேடையில் பேசிய சாந்தன் — சமூகம் பற்றி கன்ரீனில் 'ரீ' குடித்துக் கொண்டே கதைத்த சாந்தன் ... எல்லாமே ... மறந்துபோய் .. வெறும் பூர்ஷ்வாவாய்...

அவளுள் மனப் போராட்டம் ... இன்று ஸ்ட்ரைக்குக்குப் போவதா? றூமுக்குப் போவதா?

சாந்தன் ஏற்கனவே நழுவிவிட்டிருந்தான்.

ஸ்ட்ரைக் ஆரம்பமானது. மெதுவாய் ஸ்ட்ரைக்கில் கலந்துகொண்டாள் அவள். கோஷமெழுப்பி — சுலோகங்கள் தாங்கி — தார்மீக அரசைப் பாராட்டி!

ஸ்ட்ரைக் முடிந்தது.

அடுத்த நாள் பல்கலைக் கழகத்துக்கு வந்தபோது ...

சாந்தனின் முகம் அவள்மீது வெறுப்பை உமிழ்ந்துகொண்டிருந்தது.

வசந்தியிடம்தான் பிரச்சினையைக் கூறினாள் அவள்.

அவளோ பழைய கோட்பாடுகளின் பிரதிநிதி!

"என்ன இருந்தாலும் நீ சாந்தன் சொன்னதைக் கேட்டிருக்கவேணும்...பெண்கள் திருமணத்திலையோ அல்லது காதலிலையோ ஈடுபட்டால் கணவன்தான் எல்லாம். அதுக்குப்பிறகு உனக்கெண்டு ஒரு சிந்தனையோ, ஒன்றுமே இருக்கக்கூடாது. எங்கட மரபில 'கல்லானாலும் கணவன்; புல்லானாலும் புருஷன்' அதை மறந்திட்டாய் நீ."

பழைய புராண உதாரணங்களை எடுத்துக் காட்டத் தொடங்கிவிட்டாள் வசந்தி.

இவளுக்கோ விசர்தான் வந்தது.

ஏன்... ஏன் எனக்கெண்டொரு சுயம். எனக்கெண்டொரு மனம் இல்லையா வசந்தி, ஆ... நீ சொல்லு... சீ... இவரே இப்படியானவர் எண்டா, தெரிஞ்சிருந்தா... இறங்கியே இருக்கமாட்டன்' ஆவேசமாகக் கத்தினாள் அவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீ... ரஞ்சனி விசர்க்கதை கதையாதை... பெண்ணுக்குக் குடும்பம்தான் உலகம் அதுக்குமிஞ்சி அவள் சிந்திக்கவே கூடாது.

வசந்தியைப் பார்த்துச் சிரிப்பதா, அழுவதா, தெரியவில்லை. நீ என்னைக் கொஞ்ச நேரம் விடு வசந்தி...

மாலை... ரஞ்சனியும் வசந்தியுமாய் சென்றபோது வந்தான் சாந்தன்.

என்ன சாந்தன் எப்பிடி... கேட்டவள் ரஞ்சனி,

ஓ... வசந்திக்கு முன்னிலையில் பதிலளிக்க மறுக்கமுடியாதவனாய் கூறினான் அவன்,

ஸ்ட்ரைக் கோபம் ஒருமாதிரி மாறி விட்டது.

மீண்டும் ஒருநாள்... அவளுடன் பாடசாலையில் படித்த சிவா வந்திருந்தான். ரீ வாங்கிக் கொடுத்துவிட்டு அவனுடன் ஊரின் பல பிரச்சனைகளையும் கதைத்துக்கொண்டு இருந்தபோது... சாந்தன்... அவளிடம் வந்தான்.

'இருங்கோ சாந்தன் இவர் என்னோட ஸ்கூல்ல ஒண்டாப் படிச்சவர்

உங்களை மாதிரி சமூகப்பிரச்சனைகளில் ஆர்வமுள்ளவர். பேர் சிவா'

'ஆ...' என்று ஒப்புக்குக் தலையாட்டினாலும் முகம் அவனது அகத்தைக் காட்டியது.

"அப்ப சரி ரஞ்சனி, நான் போயிட்டு வாறன் — கம்பசிலையும் நீ பழையமாதிரியே மாறாமல் இருக்கிறதையிட்டு சந்தோஷப் படுறன்."

போய்விட்டான் சிவா.

"என்ன ரஞ்சி, உனக்கு என்ன கண்ட கண்ட பெடியன்களோட கதை? ஆ, சமூகமாம், பிரச்சனையாம் — பெட்டையளெல்லாம் ஏன் உதிலை ஈடுபடவேணும்? அவனும் அவன்ர மூஞ்சியும்... இனி ஆரையாவது அறிமுகப்படுத்தினி எண்டால்" — கோபம் கொப்பளித்தது.

ஓ...அவள் புரிந்துகொண்டாள் அவனை. ... 'மாதர்தம்மை இழிவுசெய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என்ற வரிகள் அவள் கண்முன்னே சாம்பராவதை அவள் கண்டாள்.

அதன்பின்தான் அவள் யோசித்தாள்... இவன்... இவர்... சீ... இப்படியும் வேஷமா? என்னால நம்பவே முடியேல்லை ... ஓ! என்னால் ஜீரணிக்கவும் முடியவில்லையே! ... றூமுக்கு வந்த அவள் விம்மி அழுதாள் ... ஒரு போராட்டம் ... இப்பவே சாந்தன் இப்பிடியெண்டால் ... எதிர்காலத்திலை ...

"தான் இல்லாம வெளியில போக விடாமை" — "தான் இல்லாம வெளிக்கிட விடாமை" எல்லாமே அவளுக்குத் 'தானாக' விரும்பும் அவனுடன் வாழ்க்கை? — கேள்விக் குறியாய் நின்றது. ஸ்ட்ரைக் சம்பவத்தையும், அன்று நிகழ்ந்த சம்பவத்தையும் இணைத்த அவளுக்கோ...

ஒருமுடிவும் எடுக்கமுடியாமல் அழுது கொண்டிருக்கத்தான் முடிந்தது அவளால், கடைசியில்... அவனுடன் வாழ்வதானால் 'ரஞ்சனி' அழிந்தே ஆகவேண்டும் என்பதை அவளால் புரிந்துகொள்ளமுடிந்தது. ரஞ்சனி அழிவதா — ரஞ்சனியின் சுயம் ரஞ்சனியின் அபிலாஷை அழிவதா...

அவளால் விட்டுக்கொடுக்கவே முடியவில்லை.

முடிவை வசந்தியிடம் சொல்லிவிட்டு., அழுதாள் அவள்... அழுதது அவனை இழப்பதற்காக அல்ல. ஒரு... வேஷதாரியை நம்பினேனே, என்ற தன் இழப்பிற்காகத்தான்.

வசந்திக்கு அதிர்ச்சியாக இருந்தது அவள் முடிபு.

ஆனால், அவளுக்கோ... நெஞ்சில் கிடந்த பாறுங்கல் ஒன்றை எடுத்து விட்டமாதிரி...

வசந்தி... வா... கம்பஸ்சுக்குப் போவம் இண்டைக்கு 'கவிதா நிகழ்வாம்' கேட்பம்.

அவள் கண்களில் ஒளி பளிச்சிட்டது.

பழைய யாப்புகளிலிருந்து விடுபட்ட புதிய கவிதையாய் அவள் சென்றுகொண்டிருந்தாள். ★





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலதும் பத்தும்

## அரச குலப் பெண்களின் கலப்பு மண வாரிசுகள்

இமாலயத்தின் அடிப் பகுதியிலுள்ள தேராய் வனப்பிரதேசத்தில் 'தாரு' இன மக்கள் வாழ்கின்றார்கள். அடர்ந்த காட்டில் பல கிராமங்களை அமைத்து வாழும் இவர்கள் ஒரு கலப்புமண வாரிசுகள்.

பதினாறாம் நூற்றாண்டில் இராஜபுதனத்தின் பல பகுதிகளை மொகலாயர்கள் கைப்பற்றியபோது அரசகுலப் பெண்கள் பலர் தங்கள் விசுவாசத்துக்குரிய காவலாட்களோடு தப்பிச்சென்றனர். பல இடங்களிலும் அலைந்து திரிந்து தேராய் வனப் பகுதிக்கு வந்தஅவர்கள் அது பாதுகாப்பான பகுதி எனக் கருதி அங்கேயே குடியேறினர். உயர்குடிப்பிறந்த அப்பெண்கள் 'பில்' இனத்தைச்சேர்ந்த தங்கள் காவலாளிகளை மணந்து குடும்பம் நடத்தத் தொடங்கினர். அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகளே தாரு இனம்.

குடும்ப விஷயங்களைப் பொறுத்த வரையில் இன்றும்கூடப் பெண்களே ஆண்களுக்கு ஆணையிடுகின்றனர் என்று சொல்லப்படுகிறது. தாரு கிராமங்களின் தலைமைப் பதவி பரம்பரையானது.

* * *

## ஜனநாயகம்

ஜனநாயகம் என்ற பதம் எல்லோராலும் பயன்படுத்தப்படுகின்றது. ஒவ்வொரு காலகட்டத்தினதும் தன்மையைக் கவனத்திற்கொண்டே அப்பதத்திற்கான விளக்கத்தைக் கூறமுடியும்.

அடிமை முறைச் சமுதாயத்தில் நிலப்பிரபுத்துவ அமைப்பை ஏற்படுத்துவதற்கான போராட்டத்தை ஜனநாயகப் போராட்டம் என்று கூறலாம். பின்னர் நிலப்பிரபுத்துவ அமைப்பு ஜனநாயக விரோத அமைப்பாகவும், முதலாளித்துவ சமுதாயத்தை உருவாக்குவதற்கான போராட்டம் ஜனநாயகப் போராட்டமாகவும் அன்றைய நிலையில் அங்கீகரிக்கப்படுகின்றன. அதன்பின் முதலாளித்துவத்தின் கொடுமைகளிலிருந்து விடுபட்டுச் சோஷலிச சமுதாயத்தை அமைப்பதற்கான போராட்டமே ஜனநாயகப் போராட்டமாகின்றது.

* * *

## மெஸ்ஸலினா

கிளாடியஸ் என்ற ரோமாபுரி அரசனின் மூன்றாவது மனைவியான மெஸ்ஸலினா பேராசையாலும், விரகதாபத்தாலும் நெறிகெட்டலைந்தவள். தன் கணவன் ஊரிலில்லாத சமயத்தில் மணமான அழகிய ஒரு இளைஞன் மீது மோகங்கொண்டு மனைவியை விவாகரத்துச் செய்யும்படி அவனை நிர்ப்பந்தித்தாள். பின்னர் தானே அவனை மணந்து கொண்டாள். இச்செய்தியை அறிந்த கிளாடியஸ் உடனே அவளைக் கொன்றுவிடும்படி உத்தரவிட்டான்.

* * *

## முதலாவது கோப்பித் தோட்டம்

இலங்கையில் தேயிலையும் றப்பரும் பயிரிடப்படுவதற்கு முன் கோப்பியே பயிரிடப்பட்டது.

1827-ம் ஆண்டு அன்றைய தேசாதிபதியாக இருந்த 'எட்வேட் பார்ண்ஸ்' என்பவர் 'ஜோர்ஜ்பேர்ட்' என்ற வெள்ளையருடன் சேர்ந்து பேராதனையில் நூறு ஏக்கர் காணி வாங்கிக் கோப்பித் தோட்டம் போட்டார். அதுவே இலங்கையின் முதலாவது கோப்பித் தோட்டம். அத்தோட்டத்தில் வேலை செய்வதற்காக இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட தொழிலாளர்களில் பலர் கொடுமை தாங்கமுடியாது தோட்டத்திலிருந்து வெளியேறினார்கள், தோட்ட நிர்வாகத்தால் அவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

— சிசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# சின்னம்மாச் சன்னம்

சி. சுதந்திரராஜா

என்னுடைய சின்னம்மாவை உங்களுக்குத் தெரியுமா? கட்டப்பொம்மன் சிலை போல் குட்டையாக ஆமைக் கழுத்தோடு இருப்பாளே அவளே தான்.

எட்டுக்கல் மூக்குத்தியும் சூரியகாந்தித் தோடும் அவளுக்கு எடுப்பாக இருக்கிறதோ என்னமோ அவளுக்கு நகை வியாபாரம் கை வந்த கலை.

மிகப் பழைய பவுண் நகைகளை வாங்குவதில் அவள் மகா சாமர்த்தியசாலி. கபடமும் ஏமாற்று வித்தையும் சுத்துமாற்றும் அவளது உடன் பிறப்புக்களே. பொய்யிலே புரளுவதை சகதியில் புரளுகிற பன்றிக் குட்டிகளை விட வெகு லாபகமாகவே செய்திடுவாள்.

''சுந்துவுக்கு பழைய சயிக்கிள் ஒண்டெண்டாலும் வாங்கிக் குடுங்கோவன். பாவம் நாள் முழுக்க பஸ்ஸுக்கு நிண்டு றோட்டெல்லாந் தூங்கி''

சின்னம்மா மீது எனக்கேற்படுகிற எரிச்சலை எல்லாம் கரைப்பது போல் சொல்லி விடுகின்றாள். என்னுள் உருவாகி மோதுகின்ற காழ்ப்பு உணர்ச்சிகளை அவள் எரித்துத் தணித்து விடுகின்றாள். நான் ஒன்றும் சின்னப் பிள்ளையுமல்ல செல்லப் பிள்ளையுமல்ல.

என்னைப் பெற்றவளை நான் கண்ணாரக் கண்டதேயில்லை. என்னை சிறுப் பிள்ளை என்றே சொல்லி வரலானார். என் அம்மாவின் பெயர் நெலும்குமாரி என்பதை விட வேறெதுவும் நானறியேன். இங்கிரியாவிலே என்னுடைய அம்மம்மா கூட இருக்கின்றாவாம் என்றெல்லாம் பழைய கதையாகச் சொல்லிக் கொள்ளுகின்றார்கள்.

சின்னம்மாவைத் தேக்கு மரத்தோடு ஒப்பிட முடியுமோ முடியாதோ அவளிடம் ஒரு தேக்கு மர அலுமாரி மட்டும் இருக்கிறதென்பதும் அதனால் நகை உலகையே ஒரு புரட்டுப் புரட்டி விட முடியும் என்பதும் உண்மை.

விரிக்கும் போதெல்லாம் அடைவுக்கும் விற்பனைக்குமாக அவளிடம் வருகின்ற ஜொலிப்பூட்டும் நகைப்பூட்டு அணிகலன்கள் என்னைப் பார்த்துச் சிரிப்பதுண்டு. பொன் மீது மனிதர் எத்தனை மோகம்?

சின்னம்மாவிற்கு பல்லவியும் தெரியும். அவள் பாடிடும் பல்லவியை சகல தரத்திலும் நகை விற்றுக் காசாக்கிட வருபவர் எல்லோருமே என்றென்றும் கேட்டேயாகுதல் வேண்டும்.

'' பவுணில பொடிவிளக்கணம் கலந்திருக்கு. இது அசல் பவுணில்லை''

இந்தப் பல்லவிக்கு மறுதீர்ப்புச் சொல்ல எந்த நீதவானாலும் முடியாது. சின்னம்மா சர்வாதிகாரியம்மாவே தான். தங்கத்து நகைகளை விற்றிட வருகின்றவர்க்கெல்லாம் என்னென்ன பிரச்சினைகளோ; பாவம். சின்னம்மா கூர்மையோடு அநுதாபப்படுகின்றவள் போல நடிப்பாள். விற்றுக் காசாக்க வருபவர் அப்பாவியாக ஏமாறுவர்.

''பவுண் இரண்டாயிரம் எண்ட கணக்கிலையெல்லே விற்கினம்''

''அது அசல் பவுண். அப்புடி நகையளைக் கொண்டந்தா இரண்டாயிரந் தல்லாம்''

''இந்த நகை எவ்வள பெறும்''

'' ஆயிரத்தி முந்நூறுக்கு மேலே ஒரு வெள்ளைச் சல்லியுந் தரேலா''

விற்றுக் காசாக்கிட வந்தவருக்கு பண முடை. சின்னம்மாவின் சிலந்தி வலையிடை வீழ்ந்த சிறுபூச்சி.

சின்னம்மாவின் நகைத் தராசில் நான்கு மஞ்சாடி விழுங்கப்பட்டு விடும்.

நகைகளை விற்கும் போது அவள் அந்தத் தராசிலே எடை பார்ப்பதேயில்லை. புதிய

[தொடர்ச்சி மறுபக்கம்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலப்பதிகாரச் சிந்தனைகள்

கவி.

சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரு காவிய நூல்களையும் இணைத்து, இரட்டைக் காப்பியம் எனக் கூறப்படுவதும் உண்டு. சற்று ஆழமாகச் சிந்தித்தால் மணிமேகலையைச் சேர்க்காமலே சிலப்பதிகாரம் மாத்திரம் ஓர் 'இரட்டைக்காவியம்' எனக் கருத முடிகிறது. ஓர் எறியில் இருகாய் விழுத்த வல்லவராகவே சிலம்பில் பல இடங்களிலும் இளங்கோஅடிகள் காணப்படுகிறார்.

வரிப்பொருள் ஒன்றாகவும் காவிய உட்பொருள் ஒன்றாகவும் சிலப்பதிகாரம் என்ற பெயர்வைப்பிலேயே உணரமுடியும். கண்ணகிகதை வரிப்பொருளாக, தமிழக ஒருமைப்பாடும் தமிழக அரசு வஞ்சியில் அமைதல் வேண்டுமென்பதும் உட்பொருளாகவும் காணலாம்.

இளங்கோ தனது இலக்கிய நூலுக்கு சிலப்பதிகாரம் என ஏன் பெயர்வைத்துக் கொண்டார்?. கண்ணகி கதை, கண்ணகி காவியம், கண்ணகி காப்பியம் அல்லது கண்ணகி புராணம் என வைத்திருக்கலாமே. ஓர் இலக்கிய நூலுக்கு அதிகாரம் எனப்பெயரிட்டுக் கொள்வது எவ்வகையிற் பொருந்தலாம்? எத்தனையோ வடசொற்களைக் கையாண்ட இளங்கோவிற்கு காவியம் / காப்பியம் என்றபதங்கள் தெரியாமலா விட்டன? ''நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்'' என இளங்கோ கூறுவதாக சிலப்பதிகாரப் பதிகம் புனைந்தவர் குறிப்பிட்டுள்ளார். முன்னுள்ள மரபையும் உட்கொண்டு சிலம்புத் தொடர்நிலைச் செய்யுள் எனப் பெயர் சூட்டியிருக்க முடியாதா? சிலப்பதிகாரத்தின் உள்ளும் புறமும் நின்று இவ்வகை வினாவுகளுக்கு விடைகள் தேடும் முயற்சியில் சிலப்பதிகாரம் இரட்டைப் பொருள்தரும் காவியம் எனப் புலப்படாதிருக்கமுடியாது.

சிலம்பு என்ற சொல் பெண்கள் காலணியையும் குறிக்கும்; மலையையும் கருதும். வஞ்சிநாடு மலைநாடு என அழைக்கப்படுவதும் மனங்கொளத்தக்கது. ''வரையின் வளனும் உடன்பெருகி மல்குநாடு மலைநாடு'' என்றுதானே சேக்கிழாரும் கூறியுள்ளார் (பெ. பு. விறல்மிண்டர்).

சிலப்பதிகாரம் ஓர் அரச காவியம் அன்று, அஃதொரு குடிமக்கள் காப்பியம் எனக் கூறப்படுவதும் உண்டு. அவ்வாறு கருதுவதைவிட, சிலப்பதிகாரம் ஒரு தனவந்தர் காவியம் என கணிப்பிடுவது பொருத்தம் போல் தெரிகிறது. கண்ணகி தந்தையும் கோவலன் தந்தையும் 'டாட்டா', 'பிர்லா', 'உபாலி' போன்ற பெரும் முதலாளிகள். அரசையே ஆட்டிப்படைக்கும் மூளைவிரகு உள்ளவர்களல்லவா பெரும் பெரும் முதலாளிகள்.

அடுத்தடுத்து வரும் இதழ்கள் சிலப்பதிகாரம் பற்றிய என் சிந்தனைகளைக் கொண்டதாகத் தொடரலாம்.

---

## சின்னம்மாச் . . .

[13-ம் பக்கத் தொடர்ச்சி]

தராக பிறிதாக வைத்திருக்கிறாள். அதிலே ஏழு மஞ்சாடி விழுக்காடு. இந்த மறைப்பு வேலையை ஆராய்ச்சி பண்ண என்னைத் தவிர வேறு ஆளில்லை.

ஓர் உரைப்புக் கல்லைக்கூட சாட்சியத்துக்கு வைத்திருக்கின்றாள். அந்தக் கல்லிலே எந்தப் பவுணைக் கரைத்தாலும் அது பொடியாகத்தான் விடை பகரும். அளிட்டை வேறு அதிலே கரைத்தும் காண்பிப்பாள்.

சின்னம்மாவின் நகை வியாபாரத்தால் எங்கள் குடும்பமே செழித்தோங்கி வளர்கிறது.

ஆனால் —

சின்னம்மாவோடு கூடத்து அறையின் தாளிடப்பட்ட கதவுக்குப் பின்னால் இரவெல்லாம் படுத்துறங்கி விட்டு விடிகாலையில் நடை கட்டும், தாடியை நீவிநீவி விட்டு...... கருடன் பார்வையோடும் போகும் அந்த ஒரு நகை வியாபார வாலிபனைக் கண்டால் என் மூளைப் புலமெல்லாம் புழுப் புரளும் வேதனை. இரண்டாந்தாரமாக என் தந்தைக்கு வாழ்க்கைத் துணையாக அமைந்து விட்ட கொடுமைக்குப் பரிகாரம் செய்கிறாளோ? முட்கம்பி கொண்டு ரண வேதனை ஏற்படுத்துகிறாளோ? றோஸாப் பூவெல்லாம் கருகி உதிர வைக்கிறாளோ?

''ஓ........ என் சின்னம்மா..........''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி என்ன குறை எங்களுக்கு — கவி.

என்னகுறை எங்களுக்கு
'தம்மிட்ட' ஆட்சியிலே
இனி, என்னகுறை எங்களுக்கு

1948-02-04 —
இன்றுதொட்டு 'நீங்கள்'
இந்நாட்டு மன்னர்கள்!
எப்போதும்போல் இப்போதும்
சும்மாயிருங்கள் வீட்டிலே
அல்லது
சுற்றித்திரியுங்கள் வீதியிலே
திட்டமிடல் நமக்குத்தெரியாது
மட்டம்நம்மூளை. ஆனதினுல்
கூப்பனரிசிமுதல் கொடுக்கின்ருேம்
எல்லாம் இலவசம் சகலமும் இலவசம்
'கூதல்' அறியாமல் மோதலைப் பழகுங்கள்
என்ன கருணை! இந்த அரசுக்குச்
செஞ்சோற்றுக் கடன்கழித்து
செய்ந்நன்றி தீர்ப்பதற்கு
எழுந்துவிட்டார்!
இருந்த இரையில்இருந்து
இரைந்தெழுந்து விட்டார்கள்!

## 2

வேலியொடு சேர்த்தனரோ
வேலியைச் சேர்த்தனரோ
வேலிதான் சேர்த்ததுவோ
நாமறியோம்
மானிடப் பயிர்த்தோட்டம் மந்தைகளாய்ப் புகுந்துவிட்டார்!
பால்மணம் மாருத பச்சிளம் மழலைக்கும்
'முத்தி' கொடுத்தார்கள்! முட்டாள்களா என்ன?
நன்றி மறவாத பண்புக்கு
நாய்களல்லோ மாதிரிகள்
என்று தெரியாத ஈனர்களா இவர்கள்?
பயங்கரக் கொள்ளைகள் கொலைகள் பாஞ்சாலி நாடகம்
அடிக்கடி பதில்அறியாத அப்பாவி மக்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி தீவைப்பு! 'கொள்ளி' வைப்பு!
ஏற்றுமதி இன்றியே இறங்கு மதியாலே
'அந்நியச் செலாவணி' மிக அதிக சேமிப்பு!
புத்த பகவானின் புத்தியே சிலிர்த்திருக்கும்.
''கல்தோன்றி மண்தோன்றுக் காலத்தே
முன்தோன்றி மூத்த குடியாகி
கொடிகட்டிப் பறந்தவர்கள் நாங்கள்
நாங்கள்தான் தமிழர்!''
என்னகுறை எங்களுக்கு
'தம்மிட்ட' ஆட்சியிலே
இனி, என்னகுறை எங்களுக்கு?

## 3

இவ்வளவுதானா எங்கள் சுகானுபவங்கள்?
கொசுகேதும் எறும்பெதுவும் மொய்க்காமல்
பாலோடு தேன்கலந்து பாய்கின்ற ஆட்சியிலே
பருகுவதோ நக்குவதோ ஏதென்ற சலனத்தில்
சுகபோக வாழ்விலே சொகுசாக மிதந்தோமே
ஆனாலும்,
பன்னிரண்டு வருடங்கள் பார்க்காத பாவத்தால்
கண் பஞ்சடைந்து வாழ்வு ஒரே சலிப்பாகி
என்ன பிறவியிது? இறைவனே இதுதகுமோ
இதயம் இருண்டு காலம் கழிக்கையிலே
என்ன புதுமை அதிசயம் அற்புதம்-
நூரளையில் குதிரைப்பந்தயம்!
இலட்சோப இலட்சம் இணைவிழிகள்
கண்டுகளித்த கண்கொள்ளாக் காட்சி!
செய்தித் தினசரிகள் மெய்சிலிர்த்து
கொட்டை எழுத்தில் கொடுத்த
பரிக்காட்சி — பெருங்காட்சி!
'குதிரை யோட்டங்களுடன்'
குதிரைப் பந்தயமும் கண்டுவிட்டோம்

என்ன குறை எங்களுக்கு
'தம்மிட்ட' ஆட்சியிலே
இனி, என்ன குறை எங்களுக்கு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய ஒருமைப்பாட்டிற்கு எழுத்தாளர் பங்களிப்பு

— கே. எஸ். சிவகுமாரன்.

தேசிய ஒருமைப்பாடு என்னும்பொழுது ஒரு நாட்டிலுள்ள பல்வேறு இனத்தவர்களுக்கும் இடையே வேற்றுமையில் ஒற்றுமை காண்பது என்பது புலப்படும். நமது நாட்டிலே சிங்களவர் தமிழர் முஸ்லிம்கள் பறங்கியர் மலாயர் போன்ற முக்கிய இனத்தவரும் ஐரோப்பியர் போன்ற வேறு இனத்தவரும் வசிக்கிறார்கள். இலங்கையர் என்றே நாம் நம்மைக் கூறிக்கொள்கிறோம். நம்மிடையே உள்ள வேற்றுமைகளைக் களைந்து ஒற்றுமைகளை வளர்க்கவேண்டும் என்பது கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றே. ஆனால், நடைமுறையில் தேசிய ஒருமைப்பாடு பேச்சளவில்தான் இருக்கிறது என்பது எனது அபிப்பிராயம். ஆங்காங்கே சில முயற்சிகள் அரசியல் சமூக மட்டங்களில் மேற்கொள்ளப்பட்டாலும், பலன் எதிர்பார்த்த அளவுக்கு இல்லையென்பது கண்கூடு.

இந்த நிலையில் தேசிய ஒருமைப்பாட்டிற்கு எழுத்தாளர் பங்களிப்பு என்ன என்பதைச் சற்றுப் பார்ப்போம். தேசிய ஒருமைப்பாட்டிற்குப் பல்வேறு இனங்களைச் சேர்ந்த எழுத்தாளர்களும் ஒத்துழைப்பது அவசியம். ஆனால் நான் அறிந்த மட்டில் தேசிய ஒருமைப்பாட்டிற்குத் தமிழ் எழுத்தாளர்கள்தான் பங்களிப்பை செய்திருக்கிறார்கள்.

தமிழ் எழுத்தாளர்கள் எவ்விதம் பங்களிப்பை செய்திருக்கிறார்கள் என்று பார்த்தால் — சிங்கள எழுத்தாளர்களையும் ஆங்கில எழுத்தாளர்களையும் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். அவர்களுடைய கவிதை சிறுகதை நாவல் விமர்சனம் போன்றவற்றைத் தமிழில் சேர்த்துத் தந்திருக்கிறார்கள். சிங்கள எழுத்தாளர்களைக் கௌரவித்திருக்கிறார்கள். கூட்டங்களில் மலர்மாலை சூட்டி வரவேற்றிருக்கிறார்கள். சஞ்சிகைகளில் அட்டைப்படம் போட்டு விளம்பரம் செய்திருக்கிறார்கள். சிங்கள நாடகங்களை தமிழில் பெயர்த்து மேடையேற்றி இருக்கிறார்கள். சிங்கள நாடகக் கலைஞர்கள் கூறியதாகக் கூறி தமக்கு வக்காலத்து வாங்கியிருக்கிறார்கள். சிங்கள நாடகங்களையும் திரைப்படங்களையும் புழுகிப் புழுகி தமிழ் நேயர்களுக்கும் வாசகர்களுக்கும் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். இவ்வாறு தேசிய ஒருமைப்பாட்டை மனதிற் கொண்டு அளப்பரிய பங்களிப்பைத் தமிழ் எழுத்தாளர்கள் செய்துவர, இப்பங்களிப்பில் ஒரு பத்து சதவீதத்தைத் தானும் சிங்கள எழுத்தாளர்கள் செய்திருக்கிறார்களா என்றால் மனம் சஞ்சலப்படுகிறது.

சிங்களத்தில் சில தமிழ்ப்படைப்புகள் வந்திருக்கின்றன என்பது உண்மையே. ஆனால் பராக்கிரமகொடித்துவக்கு, கருணாரத்ன, பெரேரா என்ற மூன்று பேரைத் தவிர தமிழர்களும் முஸ்லிம்களுமே சிங்கள வாசகர்களுக்காக தமிழ்ப்படைப்புக்களை பெயர்த்து அறிமுகம் செய்ய வேண்டியிருக்கிற பரிதாப நிலை ஒன்று.

பற்றுக்குறைக்குப் பத்திராஜ என்ற சிங்கள திரைப்பட நெறியாளர் ஒருவர் பொன்மணி என்றதொரு படத்தை தமிழில் நெறிப்படுத்த வந்து இடறிவிழுந்த கதை நமக்கெல்லாம் தெரிந்ததுதான். தேசிய ஒருமைப்பாட்டில் அக்கறை காட்டியிருப்பவர்கள் தமிழ் எழுத்தாளர்கள்தான். சிங்கள எழுத்தாளர்களுக்கு அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. தமக்குத் தமிழ் தெரியாது என்றும் அதனால் மொழிபெயர்க்க முடியவில்லை என்றும் கூறும் சமாதானத்தை ஏற்றுக்கொள்ள முடியாதிருக்கிறது. உண்மையிலேயே அவர்கள் தமிழ் கற்று தேசிய ஒருமைப்பாட்டிற்கு உழைக்கவேண்டும்.

டி. டி. நாணயக்கார, மினிஹாமி போன்றவர்கள் சில பழைய தமிழ் நூல்களைச் சிங்களத்தில் தழுவியிருந்தபோதும், சிங்களவர் மத்தியில் தேசிய ஒருமைப்பாட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கராபரணம்

'யாழூர்துரை'

"மொழியும் புரியாமல், சாஸ்திரிய சங்கீதமும் தெரியாமல் சங்கராபரணத்தை ரசிப்பது எப்படி?"

இது எனது நண்பரது கேள்வி.

"என்ன நாம் பார்க்கும் பிற மொழிப் படங்களை எல்லாம் புரிந்துவிடும் என்று பார்க்கிறம்?

இல்லவே இல்லை.........

"சங்கராபரணம் கர்நாடக சங்கீதத்தை விளக்கும் படம்தானே! ஏதோ அறிவில்லா விட்டாலும் ஆத்மா மட்டும் இருக்கிறது. ரசித்தால் இருப்போம் ......................"

— இது என் பதில்.

அரங்குள் அமர்வு கிடைத்த ஒவ்வொரு விநாடியும் என் ஆத்மா இங்கில்லை. ஆம், இரண்டரை மணி நேரத்தில் ஆத்மாவைத் தட்டிக்கொட்டி, சுருதிகட்டி நமக்கே தெரியாமல் உள்ளுக்குள் உறங்கிக் கிடக்கும் ராகங்களை — உணர்வுகளை வெளிக் கொண்டு வந்துவிடுகிறார் டைரக்டர் கே. விஸ்வநாத்.

ரைட்டில் அற்புதம். ஆரம்பக் காட்சியில் வரும் அந்தச் சிறுவனின் சின்னச்சின்ன சங்கீத வெளிப்பாடுகள் — இரு குடங்களை இசையெழுப்புவது — சாவிக் கொத்து — ஆபரணங்களை கிலுக்கி நாதம் எழுப்புவது — பின்னால் வரும் காட்சிகளுக்கு பச்சை விளக்காக விளங்குகின்றது.

காலம் ஓடுகிறதா காட்சி ஓடுகிறதா என்ற பிரமை.

இசைமழை ... தேனிசை மழை ... இசை வெள்ளம் ... கண்கனிஒலி — பூரிக்கும் பரவசம் ... இவற்றையெல்லாம் எழுத்தில் வடிப்பதோ முடியாத காரியம்.

கதையின் ஜீவ பாத்திரமான சங்கர சாஸ்திரிகளாக நடித்துள்ள ஜே. வி. சோமயாஜுலு, நிஜமாகவே நடித்துக் காட்டவில்லை; வாழ்ந்து காட்டுகிறார். திரையுலகில் ஓர் நாயகன்தான்.

'துளசி' பாத்திரத்துக்குப் பண்பட்ட நடிகை, மஞ்சிபார்கவி — இயற்பெயர். சங்கர சாஸ்திரியைக் காணும்போதெல்லாம் அவர் காட்டும் பாவம் அற்புதம், அபாரம், "Excellent" என்றுகூடச் சொல்லலாம்.

அப்புறம் கண்டம்வரை ஜலத்தில் நின்றுகொண்டு, தந்தையிடம் பாடம் கற்றுக்கொள்ளும் குழந்தை சாரதாவும், தெய்வீகக் கலையான கர்நாடக சங்கீதத்தைப் போற்றிக் காக்கும் இளைஞன் சங்கராகும் மறப்பதற்கில்லை.

பாடல்கள் கிண்கிணி — சுரம் அபாரம். "மானஸ ஸஞ்சரரே", "தொரகுனா இட்டுவண்டி சேவா" — மனதை நிலையாக வைத்துவிட்டன.

படத்தில் இசையை உபாசிக்கும் சங்கர சாஸ்திரியிடம் ஒரு தெய்விக உறவோடு சரணடையும் துளசியின் நடிப்பு அழுத்தம் நிறைந்து அற்புதம் மிக்கது. கீர்த்தனைகளைப் புகுத்தியதே அபாரம். தியாகராஜ கீர்த்தனைகளை கேட்பதற்கும் ஒரு காலம் "சங்கராபரணம்".

---

டிற்கு இவை எந்தவிதத்திலும் உதவியாகத் தெரியவில்லை. தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் கட்டுரைகள்சில ஆங்கிலத்தில் தமிழர் அல்லாதவரிடமிருந்தும் எழுதப்பட்டுள்ளன. ஆனால் ஆங்கிலம் தெரிந்த மக்கள் எத்தனைபேர். நாலு அல்லது ஐந்து சதவீதத்தினரே ஆங்கிலம் தெரிந்தவர்கள். ஆங்கில மொழி ஒரு பரந்த உலக நோக்கை ஏற்படுத்த வழிவகுத்தாலும் அம்மொழியின் மூலம் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் நாட்டின் பெரும்பான்மையான மக்களிடையே சென்றடைவது என்பது இயலாத காரியம்.

எனவேதான் தேசிய ஒருமைப்பாட்டிற்கு எழுத்தாளர் பங்களிப்பு என்பது வெறும் கண்துடைப்பு என்பது எனதுகருத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சிந்தனைகள்

ப. சந்திரசேகரம்
கல்வித்துறை
யாழ் பல்கலைக் கழகம்.

தத்துவம் மனிதனின் சிந்தனைகள் ஒழுங்காக அமைகின்றனவா என ஆராயும் தன்மை கொண்டது; அச்சிந்தனைகள் காரணகாரிய முறையில் எழுதல் வேண்டும் என்றும் தத்துவம் கொள்ளும். உயிருள்ள ஒவ்வொரு அம்சத்துக்கும் சிந்தனைசக்தி உண்டு என்பது பொதுவிதி. மனிதர்கள் எல்லோரும் சிந்தனைசக்தி கொண்டவர்கள் — அச்சிந்தனை சக்தியை ஒழுங்குபடுத்துவதோடு, சிந்தனைசக்தியை வளர்ப்பதற்கு உறுதுணையாய் விளங்குவதும் தத்துவத்தின் பணியாகும். உலகினது பலதுறை ஆக்கமே சிந்தனையில் உருவாக்கப்படுவது என்று கொள்ளும் பொழுது, தத்துவத்தின் முக்கியத்துவம் புலனாகின்றது.

தத்துவம் தன்னகத்தே பல இயல்களைக் கொண்டு விளங்குகின்றது. உளவியல், உடலியல், உயிரியல், சமூகவியல், கல்வியியல் ஆகியன இவற்றினுள் அடங்கும். சமூகவியல், மனிதன் எவ்வாறு தன் சூழலோடு சேர்ந்து வாழ்கின்றான், எவ்வாறு இணக்கம் பெறுகின்றான் என்பதை விளக்குவது. கல்வியியல், மனிதனின் உள்ள வளர்ச்சியை ஒழுங்கு படுத்துகின்ற, செயலில் ஈடுபடும் பொழுது, மனிதனின் வாழ்க்கை இலட்சியத்தையும் உருவாக்கும் தன்மை வாய்ந்தது.

கல்வி, தத்துவ ஒழுங்கின் சிறந்த அம்சம் எனக் கொள்ளப்படுகின்றது. தத்துவம், கல்வியின் சிறந்த நிலை எனும் கருத்தினை அமெரிக்கக் கல்வி நெறியாளர் ஜோன் டியூகு போன்றவர்கள் நிலைநாட்ட முன்வந்ததிலிருந்து, கல்வியே பல பாட ஒழுக்கங்களுக்கும் அன்னை எனும் கருத்து அவர் உள்ளத்தில் முதன்மை பெற்றது என்று தோன்றக்கிடக்கின்றது.

தத்துவமும், கல்வியும் இணைந்து வாழும் சாத்திரங்கள் எனக் கொள்வது பொருத்தமாகின்றது, எனும் கருத்து இன்று கல்வி உலகு ஏற்றுக்கொள்வதாகும்.

தத்துவமும், கல்வியும் இணையும் பொழுது, அறிவு நிலை, இயற்றல் அல்லது ஆக்கப்பாட்டு நிலை, உணர்ச்சி நிலை ஆகிய உளவியல் ஆக்கங்களைத் தழுவி உருவாக்கப் படுகின்றது. இந்த மூன்று நிலைகளும், உண்மை, நன்மை, மனப்பாங்கு ஆகிய இலட்சியங்களை உணர்த்துகின்றன. அறிவு நிலை, இயற்றல் நிலை, உணர்ச்சி நிலை ஆகிய நிலைகளின் வெளியீடுகளாக தருக்கம், அறிவியல், அழகியல் போன்ற இயல்புகள் வளர்க்கப்படுகின்றன.

இம்மூன்று இயல்புகளும் கல்வியின் மூலம் இணைவது முக்கியமாகின்றது. தருக்கத்தில் எழுந்த, அறிவியற் சமுதாயம் அழகியற் சமுதாயமாக உருவகம் கொள்ளும் பொழுது, சமுதாயம் முழுத்துவ வளர்ச்சியை அடைகின்றது. தருக்கத்தில் எழும் அறிவியலும். அறிவியலில் எழும் அழகியலும், இவற்றினுக்குள்ளேயுள்ள ஒற்றுமையைக் காட்டுவதுமட்டுமன்றி, நவீன சமுதாயம் காண விழைவதற்கு ஒன்றின் சேர்க்கையான மூன்று தன்மைகளும் அத்தியாவசியம் என்பதனையும் வலியுறுத்துகின்றது.

மனிதன் பகுத்தறியும் ஆற்றல் கொண்டவன்; பகுத்தறியும் ஆற்றல் கொண்ட மனிதன், ஆய்வுத்திறனும் பெறுகின்றான். ஆய்வுத்திறன் வளரும் பொழுது, தொகுத்தறியும் ஆற்றலும் வளர்கின்றது. மனிதன் ஒரு உளவியல் உருவகம். உளவியல் மனிதனைத்தானே அறியச்செய்வது; உணரச்செய்வது.

உளவியல் வல்லுநர் பியாஜே அவர்கள், மனிதன் தன்னைத்தானே அறிதல், தன்னைத்தானே உணர்தல், எனும் கருத்துக்களை அடிப்படையாக வைத்து, மனிதன் தன்னைத்தானே பகுப்பாய்வு செய்வதற்கு உளவியல் முக்கியமானது எனக்கூறுவார்கள். பாரதம் அளித்த வேதகாலத்து உளவியலாளர் பதஞ்சலி, பியாஜே கொண்ட கருத்தினைத் தீர்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரிசனமாக எடுத்துக்கூறியுள்ளார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தத்துவம் என்பதற்குக் காட்சி என்ற பொருளுமுண்டு. நாம் வாழ்க்கையிற் காண்கின்ற பொருட்களெல்லாம் தத்துவ, கல்விக் கருத்துக்களாக உருவெடுக்கின்றன. கல்வி, காட்சியாகின்றது என்று கொள்ளும் பொழுது கல்வி மெய்ம்மை என்ற பொருளையும் பெறுகின்றது. எனவே, கல்வி மெய்ம்மையில் எழுந்த காட்சி எனவும், காட்சியில் எழும் மெய்ம்மை எனவும் கொள்ளப்படலாம்.

தத்துவம் பாரதம், சீனு போன்ற நாடுகளில் தனித்துவமும், சிறப்பும் பெற்று விளங்கியது. பாரதமரபின்படி தத்துவம் பண்பாட்டின் அடிப்படை; பண்பாட்டின் எல்லையற்ற முடிவு. வாழ்க்கையில் நாம் பெறுகின்ற நேரடி அனுபவம், மக்களின் மெய்ம்மை பற்றி அறிவதற்கு, நிறைவான அறிவைப் பெறுவதற்கு தத்துவத்தின்பால் எழுந்த கல்வி முக்கிய சாதனமாகும். பாரதத் தத்துவக் கல்விமரபு, மனிதனுக்கு இயல்பாகவே அறிவியலில் நாட்டம் உண்டு எனக் கொண்டது. இயற்கையாக அமைந்திருக்கும் இந்த அறிவியல் நாட்டம் மனிதன் தான்வாழும் சூழ்நிலையை அறிய பண்படுத்தப்பட்ட சாதனமாக விளங்கவேண்டும் மனிதனில் இயற்கையாகவுள்ள அறிவியல் நாட்டம் ஆராயும் விருப்பு ஆகியவை இணையும் பொழுது, அது வாழ்க்கைத் தத்துவமாக மலர்கின்றது. மனிதனது அன்றாட வாழ்க்கையில் தான் காணும் நிகழ்ச்சிகள், தான் பெறும் அனுபவங்கள் மனிதனுக்கு வாழ்க்கையில் வியத்தகு சிந்தனையை அளிக்கின்றது.

இந்த வியப்புணர்ச்சி வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்க்க, வாழ்க்கையை மேம்படுத்தத் துணைபுரிகின்றது. பாரத ஞானிகள் கண்ட இம்முடிபு, கிரேக்கம் தந்த உலக அறிஞராம் பிளேட்டோவின் கருத்துக்களிலும் மிளிர்வதைக் காணலாம். தத்துவஞானி பிளேட்டோ, தனது ஆதிமிகப் பேராசானை சொக்கிரட்டீஸ், அவர்களின் மறைவுக்குப் பின்னர் ஆத்ம சாந்தி தேடி, பல நாடுகளுக்குச் சென்றதாகவும், பல தத்துவ நோக்குகளை ஆராய்ந்ததாகவும் கொள்ளப்படுகின்றது. பிளேட்டோவின் கல்விச்சிந்தனைகளைக் கற்று நிபுணத்துவம் பெற்ற பிரித்தானியப் பேராசிரியர் உவில்லியம் பொயிட், பிளேட்டோ பாரத நாட்டிலும் வாழ்ந்தாரோ எனும் கருத்து ஆராயப்படவேண்டும் எனும் கருத்தினைக் கூறியுள்ளார். நமது கல்வித்தத்துவ ஆராய்ச்சி மாணவர்களுக்கு பிளேட்டோவின் தத்துவத்தில் பாரத நாட்டுத் தரிசனத்தின் தாக்கம் எனும் பொருள், ஆய்வுப் பொருளாக விளங்க முடியும்.

பிளேட்டோவின் கருத்துப்படி உலகத்தின் உருவாக்கமே வியத்தகு சிந்தனையில் எழுந்தது என்பதாகும். பிளேட்டோ கூறிய கருத்தினை விமர்சனம் செய்த விஞ்ஞானத் தந்தை அல்பேர்ட் அய்ன்ஸ்ரீன் இந்த வியத்தகு சிந்தனையோடு, இறைவன் உணர்வு இணையும் பொழுது அது உலக ஆக்கத்துக்கு இன்னும் வழிகோலும் என்பர்.

மேலைநாட்டுத் தத்துவத்தின் தாயகம் பொதுவாகக் கிரேக்கம் என்று கொள்ளுகின்றோம். அதேபோன்று கீழைத்தேயத் தத்துவத்தின் தாயகம் பாரதமும், சீனமும் என்று கொள்ளப்படுகின்றது. சொக்கிரட்டீஸ், கொன்பியூசியஸ், பதஞ்சலி, வள்ளுவர் போன்றோர் உலகம் உய்யத் தத்துவம் பரப்பியவர்கள். இவர்கள் சிறந்த உலக ஆசிரியர்கள். இவர்கள் போன்ற தீர்க்கதரிசிகளை இறைவனுக்கே உரித்தானவர்கள் என்று கொள்ளுகின்றோம். இவர்கள் அளித்த தத்துவங்கள், கல்விச் சிந்தனைகள் பல காலங் கட்கேற்ப விரிந்த பொருட்களைக் கொண்டன. இவை மக்களுக்குத் தனிப்பட்ட உரிமைகள் அளிக்கின்றன. உலகின் அடிப்படை இயல்பை விளக்குகின்றன. அத்தோடு மக்கள் கைக்கொள்ளவேண்டிய நெறிகளையும் போதிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியத் தமிழ் மகாகவி

— திரு. வெய் பெய்சுங் —

[ பீக்கிங்கில் வாழும் இக்கட்டுரையின் ஆசிரியரான திரு. வெய் பெய்சுங் முன்னர் நாலு ஆண்டுகளாகப் பீக்கிங் அயல்மொழிப் பதிப்பகத்தின் தமிழ்ப்பகுதியில் திருமதி ராணி சின்னத்தம்பியுடன் பணிபுரிந்தார். இப்பொழுது வேறுவேலையில் ஈடுபடுகின்றபோதும் ஓய்வுநேரத்தில் தமிழ்மொழி ஆராய்ச்சியில் ஈடுபடுகின்றார். தமிழ்மீது தாம் கொண்டுள்ள அன்பின் காரணமாகவே தான் இப்படிச் செய்வதாக அவர் கூறுகின்றார். 45 வயதான இந்தச் சீனத் தமிழ் அன்பர் ''இந்தியத் தமிழ் மகாகவி'' என்ற தலைப்பில் சீன சஞ்சிகை ஒன்றுக்கு எழுதிய கட்டுரையின் தமிழாக்கத்தை மகிழ்ச்சியுடன் இங்கு தருகின்றோம்.]

''கவிதை ஆத்மத் தீ — அது
ஆத்மாவுக்கு ஒளியும் இதமுமூட்டிப்
பிரகாசிக்கவைக்கும்.'' — டால்ஸ்டாய்

மனித குலத்தின் கலைக் களஞ்சியத்துக்குச் செழிப்பூட்டும் ஆத்மீகப் படைப்புகளைப் படைக்கும் மகாகவிகள் அனைவரும் காலாதி காலமாய்ப் போற்றப்பட்டு வருகிறார்கள். அவர்களுடைய படைப்புகள் அனைத்தும் மக்களின் உணர்வுகளுடனும், ஆசைகளுடனும், இலட்சியங்களுடனும் நெருங்கிப் பிணைந்திருக்கின்றன. அவை அவர்கள் வாழ்ந்த காலத்தின் தேவைகளைப் பிரதிபலித்திருக்கின்றன. ஆகவே, மக்கள் மகாகவிகளின் கவிதைகளை நேசித்து அவற்றைத் தலைமுறை தலைமுறையாக நினைவுகூருகின்றனர்.

இந்தியாவின் தமிழ்க் கவி சுப்பிரமணிய பாரதியாரும் இத்தகைய கவியேயாவார். மக்களால் மனமார நேசிக்கப்பட்ட புரட்சிக் கவியாகிய பாரதியார் நீண்ட நெடு வரலாறும், செழுமை மிக்க கலாச்சாரமுமுடைய வளமிக்க ஆனால், அப்பொழுது அந்நிய ராதிக்கப்பிடியிலிருந்த இந்திய மண்ணிற் பிறந்து, இந்திய நாட்டின் சுதந்திரத்துக்காக நடந்த ஜீவ மரணப் போராட்டத்தின் மத்தியிலே வாழ்ந்து மடிந்தார்.

அவர் அந்நிய ஆதிக்கத்துக்கு எதிரான தேசிய ஈடேற்றத்துக்கான போராட்டத்துக்கே தன் வாழ்வை அர்ப்பணித்தார். அத்துடன் மக்களின் நல்வாழ்வுக்கான கவிதை பாடுவதற்கும் தன் முழு வாழ்வையும் அர்ப்பணித்தார்.

'' நமக்குத் தொழில் கவிதை; நாட்டுக்குழைத்தல்'' என்பதே அவரது தாரக மந்திரமாய் இருந்தது.

தற்காலத் தமிழ் இலக்கியத்தில் பாரதி ஒரு முக்கிய இடம் வகிக்கின்றார். தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சியிலும் பாரதி பெரும் செல்வாக்கை வகித்துச் சென்றார். அவர் எண்ணற்ற கவிதைகளைப் பின் சந்ததியினருக்கு விட்டுச் சென்றிருக்கிறார். அவையெல்லாம் அடிக்கடி எடுத்தாளப்பட்டும், போற்றப்பட்டும் வருகின்றன. அவரது கவிதைகள் மக்களுக்குப் புகழாரம். எதிரிகளின் நெஞ்சிற் பாய்ச்சப்படும் குத்துவாள். அவை போராட்ட அறைகூவல். அவரது கவிதைகள் ஏகாதிபத்தியத்துக்கும் காலனித்துவத்திற்கும் எதிராய் இந்திய மக்கள் நடத்திய போராட்டத்தின் கலைத் தொகுப்பு, அவரது கவிதைகள் தமிழ் இலக்கியக் களஞ்சியத்தின் சுடர்விடும் முத்துக்கள்.

பாரதி வாழ்ந்து உழைத்த காலம் இந்தியா அந்நியராதிக்கத்தில் உழன்ற காலமும் அதன் கலாச்சாரம் நுலைத்துத் துவம்சம் செய்யப்பட்ட காலமும் ஆகும். ஆனால், அந்தக் காலந்தான் இந்திய மக்கள் விழித்தெழுந்ததும், தேசிய விடுதலை இயக்கம் விறுவிறுப்பாய் வளர்ந்ததுமான ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆரம்பப் புயல் வீசும் காலமுமாய் இருந்தது. காட்டு மிராண்டித் தன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான அந்நிய அடக்குமுறையும், கலாச்சார ஒடுக்கு முறையும் மக்களுக்கு ஏற்படுத்திய துன்பமும், அதனுல் மக்கள் மத்தியில் ஏற்பட்ட அந்நிய எதிர்ப்புமே கவிஞர் மனதிற் தேசபக்தியைக் கிளறிவிட்டன. அவர் இந்திய மக்களின் சுதந்திரப் போராட்டத்துக்குத் தன்னேயே அர்ப்பணித்து அதில் ஆட்டமசைவின்றி இருந்தார்.

அவரது சுதந்திரப் பள்ளு அவரது சிறந்த கவிதைகளுள் ஒன்று. அது அவரது போராட்ட இயல்பையும், புரட்சிகரச் சுதந்திர உணர்வையும் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. தேசிய திடசித்தமும், தேசிய தனித்துவமும் நிறைந்த அவரது சுதந்திரப் பள்ளு புரட்சிப் போராட்டத்தில் அவர் கொண்டிருந்த அசையாத நம்பிக்கையைப் பிரதிபலிக்கின்றது. உணர்ச்சிப் பெரு வேகமும் உன்னத எண்ணங்களும் உடைய சுதந்திரப் பள்ளு கவிஞரின் நம்பிக்கைகளேயும், அவருடைய அன்புகளேயும் வெறுப்புகளேயும் வெளிப்படுத்துவதோடு காலனித்துவ ஆட்சியின்கீழ் அல்லலுற்ற இந்திய மக்களின் பொது விருப்பங்களேயும் எதிர்பார்ப்புகளேயும் பிரதிபலிக்கின்றது. இப்பாடல் சுதந்திரம், விடுதலே ஆகியன பற்றிய கவிஞரின் அழகான கற்பனேகளேயும், அவர் அவற்றுக்களிக்கும் பாராட்டுக்களேயும் கொண்டதாக இருக்கின்றது. இன்றும்கூட இந்தப் பாடலே நாம் படிக்கும்போது அது எம்மனதிற்பதிந்து எமக்கு உற்சாகமூட்டுகிறது. அதைப் படிக்குந்தோறும் அதன் சந்தமும், அதிற் புலப்படும் கவிஞரின் ஆழ்ந்த உணர்வுகளும் எம்மைக் கவர்கின்றன. இந்தப் பாடல் உணர்ச்சிப் பொறிகளேக் கக்கி, இலட்சியப் பிழம்புகளே உயர்ந்தெழச் செய்து, பழைய சமுதாய அமைப்பையே நிர்மூலமாக்கும் போராட்டச் சுவாலேகளே விசிறிவிடுகிறது.

பாரதி தொலேநோக்கும், நிர்ணயத் திறனும் உடையவர். அவரது கவிதைகள் பழைய நிலேமைகளே மாற்றும் உறுதியும் துணிவும் நிறைந்த புதிய எண்ணங்களின் களஞ்சியம். அவை மக்களுக்கு அறிவொளியையும், உற்சாகத்தையும், பலத்தையும் கொடுக்கின்றன. அவரது கவிதைகளிற் காணப்படும் எத்தனேயோ புத்தெண்ணங்கள் அவர் இறந்து அரை நூற்ருண்டுக்குப் பின்னும் ஒப்பீட்டளவிற் புரட்சிகரமானவையாய் இருக்கின்றன. கவிஞர் சுதந்திரம் கிட்டும்வரை வாழாவிட்டாலும் அவர் புதிய பாரதத்துக்கெனத் தயாரித்துக் கொடுத்த நகற் திட்டம் மிகப் பிரமாண்டமானது. அது இன்றும் மக்களே முன்னடத்திச் செல்லும் ஆத்ம சக்தியாகப் போற்றப்படுகிறது. அவர் தனது 'புதியசமுதாயம்' என்ற கவிதையிற் பின்வருமாறு பாடுகிருர் :

''முப்பது கோடி சனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை''

* * *

''எல்லாரு மோர்குலம் எல்லாரு மோரினம்
எல்லாரு மிந்திய மக்கள் ;
எல்லாரு மோர்நிறை எல்லாரு மோர்விலே
எல்லாரும் இந்நாட்டு மன்னர்''

இக்கவிதை ஒடுக்கப்பட்டமக்களுக்காகப் பிரகாசமான எதிர்கால வாய்ப்புகளே எடுத்தியம்பிய கவியின் இலட்சியங்களேயும் ஆசைகளேயும் எழுச்சிகளேயும் காட்டுகின்றது. இது ஆத்மீக அடிமைத்தளேயை உதறியெறிந்து உதயசூரியனே வரவேற்க மக்களுக்கு உதவி செய்கின்றது.

20 ஆம் நூற்ருண்டின் ஆரம்பத்தில் இந்திய தேசிய விடுதலே இயக்கம் வளர்ச்சிப் போக்கில் இருந்தது. அச்சமயத்தில் நிகழ்ந்த பெரிய சர்வதேசிய சம்பவங்களும், கவிஞர் மீது பெரும் செல்வாக்கு வகித்தன. முக்கியமாக 1905 — 1907 ருஷியப் புரட்சியும், மற்றும் வேறுசில நாடுகளில் நடந்த தேசிய விடுதலே இயக்கங்களும் அவர் கவனத்தைக் கவராமலில்லே, காலப்போக்கில் ஏகாதிபத்திய யுத்தங்களும், காலனித்துவ அடக்குமுறையும் மேலும் உக்கிரமடைந்ததால் இந்திய மக்களின் வறுமை பெருகி எங்கும் பட்டினியும் பிணியுமாயிருந்தது. கோடிக்கணக்கான மக்கள் இறந்தனர். இந்தியாவின் இந்த நிலேமை கவிஞரின் மனதைத் தொட்டது. மக்களனுபவித்த துன்பங்களும், அவர்களுக்கேற்பட்ட நாசங்களும் கவிஞரின் நெஞ்சைப் பிழிந்தெடுத்தன. இச்சமயத்தில் ருஷிய அக்டோபர் புரட்சியின் பீரங்கி வெடி இந்தியப் பெருங்கண்டத்திலும் ஒலித்தது. தூரத்தில் ஒலித்த சத்தியத்தின் குரல் இந்திய மக்களின் மனதில் நம்பிக்கைத் தீயை வளாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. பாரதி மகத்தான அக்டோபர் புரட்சியைப் போற்றிப் பாடிய முதல் இந்தியக் கவிஞருள் ஒருவராவார். அக்டோபர்ப் புரட்சியைக் கண்டு அவர் அதிசயித்ததும், அதற்கு அவர் அளித்த பாராட்டும் புதிய ருஷியா என்ற பாடலிற் பரவிக் கிடக்கிறது.

பாரதியின் பாடல்கள் அர்த்தச் செழிப்புள்ளவை. அவரது பாடல்கள் அரசியற் கருத்துக்களும், உறுதியான போராட்ட உணர்வும் உடையனவாய் மட்டும் இருக்கவில்லை. அசமத்துவத்தையும் சமுதாயத்திற் படிந்த இருளையும் கண்டிப்பனவாயும், பேராசை, சுயநலம், ஏமாற்று ஆகியவற்றைக் கண்டிப்பனவாயும் இருந்தன. நேர்மை, விசுவாசம், சுறுசுறுப்பு, காதல், நட்பு ஆகியவற்றைப் புகழும் உள்ளத்தைத் தொடும் எண்ணற்ற பாடல்களையும் அவர் எழுதியுள்ளார். சமயத்தையும், புராணக் கதைகளையும் அடிப்படையாய்க் கொண்டமைந்த முந்திய தமிழ் இலக்கியப் போக்கைப் பாரதியின் இந்த ஜனரஞ்சகமான போர்ராட்டப் பாடல்கள் தகர்த்தெறிந்தன.

அவரது கவிதைகள் புதிய கருத்துக்களையும், தேசிய விடுதலையையும் உள்ளடக்கமாய்க் கொண்டிருந்தன. நேர்மையும் உண்மையும் உயிர்த்துடிப்புமுள்ள மொழியும் நடையும் மக்களின் மனங்களில் இப்பாடல்களுக்கு இடம் பெற்றுக் கொடுத்தன. அவருடைய பாடல்களில் உழைப்பாளி மக்களின் எளிய நகைச்சுவை நிறைந்த மொழி ஊடுருவிக் கிடக்கிறது. அவர் பாடல்கள் வரிக்கு வரி உள்ளக் கிளர்வை ஏற்படுத்துவன. அவரது பாடல்கள் இனிய மெட்டுக்கும் சொல்லாற்றலுக்கும் பிரசித்தி பெற்றவை. அவை மனித மனதைத் தட்டியெழுப்பும் மேள வாத்தியமாய் அமைந்தன. தமிழ் மக்கள் அவர் பாடல்களை இனிய மெட்டில் சந்ததி சந்ததியாய்ப் பாடுகின்றனர். பாடுவார்கள். இப்படி எண்ணியதும் பாரதியாரின் பாப்பாப் பாடல்தான் நினைவுக்கு வருகிறது. அது எளிய, அன்பான, சுவையான முறையிற் பிள்ளைகளுக்கு அறிவூட்டுகின்றது. குழந்தைகளின் கள்ளங்கபடமற்ற பிஞ்சு உள்ளங்களில் அக்கறை கொண்ட கவிஞர் குழந்தைகளை வேண்டுமட்டும் ஆடிப் பாடிக் களிக்கச் சொல்கிறார்.

பாப்பாப் பாடலில் கவிஞர் குழந்தைகளின் கள்ளங்கபடமற்ற கற்பனைகளுக்கும், உணர்வுகளுக்குமேற்ப இயற்கைப் பொருட்களையும், இயற்கை நிகழ்ச்சிகளையும் எடுத்தாள்கிறார். ஒரு கடின வார்த்தைகூட இன்றிக் குழந்தைகளுக்கு மிகமிகப் பொறுமையாய்ப் போதனை அளிக்கிறார்.₁ இக்கவிதை அவர் குழந்தைகள்மீது கொண்டிருந்த கொள்ளை ஆசையையும் குழந்தைகளை நேர்மையும் நல்லெண்ணமும் ஆரோக்கியமும் மிக்கவராய் வளர்க்கும் அவருடைய வேணவாவையும் நன்கு புலப்படுத்துகிறது. இப்பாடல் குழந்தைகளை மட்டுமல்ல முதியவரையும் கவர்ந்திழுக்கிறது.

அவரது பாடல்கள் தமிழிலக்கியச் செல்வத்தில் ஒரு பகுதியாய் அமைவதோடு தமிழ் மக்கள் மனங்களுக்கு ஊட்டமிக்க பெரு விருந்தாகவும் அமைகின்றன. அவர்தம் கவிதைகள் தமிழிலக்கியத்தில் ஒளி வீசிக் கொண்டே இருக்கும் என்று கூறின் மிகையாகாது.

அவரது கவிதைகளில் மதக் கருத்துக்களும், கற்பனாவாதமும், மனித இயல்புபற்றிய பூர்ஷுவா வர்க்கக் கருத்துக்களும் இருக்கின்றன என்பதிற் சந்தேகமில்லை. ஆனால்; நாம் அவற்றைக் கால அடிப்படையில், வரலாற்று அடிப்படையிற் பார்க்க வேண்டும். ஒரு கவிஞனிடமிருந்து நாம் ஒருபோதும் அவரது காலத்தை மிஞ்சி, அவரது பின்னணியை மிஞ்சி அளவுக்கதிகமாய் எதிர்பார்க்க முடியாது.

1921ஆம் ஆண்டு இன்னும் நாற்பதுவயதை எட்டாதபோது யானையாற் தூக்கியெறியப்பட்டு நோயுற்று சிலநாட்களில் அவர் உயிர் நீத்தார். மிகவும் இளமையில் அவர் மறைந்தது கவலைக்குரியதாகும். அவர் மேலும் பல ஆண்டுகள் வாழ்ந்திருந்தால் மேலும் பல நல்ல கவிதைகளை எழுதியிருப்பார்.

அரை நூற்றாண்டுக்கு முன்னர் எழுதப்பட்ட அவரது உணர்ச்சி நிறைந்த கவிதைகளை வாசிக்கும்போது தன் நாட்டுக்காகத் துடித்த அவரது மனதைக் காணமுடிகிறது.

இப்படியான கவிஞர் பாரதியையும் அவர்தம் கவிதைகளையும் சீன மக்களுக்கு அறிமுகம் செய்வது எம் கடமை, மகிழ்ச்சிகரமான கடமை என நாம் கருதுகிறோம்.

தமிழாக்கம் **வீ. சின்னத்தம்பி**

பீக்கிங் **31-8-81**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதங்கள்

கிருதயுகத்தில் பாரதி நூற்றாண்டு விழாப்பற்றிய கருத்தை வாசித்து மிகவும் மகிழ்ந்தேன். பாரதி பைலாஅடிக்கத் தொடங்கி விட்டான் என்ற அந்த சொற் தொடர்தான் எவ்வளவு அழகாக அமைந்து இருக்கிறது.

உங்கள் வாழ்வில் மேலும் பெரும் வெற்றிகள் பெற வாழ்த்தி முடிக்கின்றேன்.

பீக்கிங் — வீ சின்னத்தம்பி
29-02-81

* * *

முற்போக்கின் பெயரில் பல தமிழ்ச் சஞ்சிகைகள் தோன்றி உள்ளன. ஏதோ ஏழ்மையில் மக்கள் படும் துன்பங்களையும், இன்னல்களையும் விபரித்து எழுதிவிட்டால் போதும். அதுவே முற்போக்கு இலக்கியம் என்று கருதுவது வழக்கமாகிவிட்டது. வேறும் சில சஞ்சிகைகள் இந்த ஏழ்மை என்னும் பிணியைத் தீர்ப்பதற்கு பல்வேறு பட்ட தான்தோன்றித் தனமான பரிகாரங்களை விஸ்தரித்து எழுதுவதே முற்போக்கு இலக்கியமென்று பெயர் சூட்டிக்கொள்கின்றனர்.

ஆனால் '' கிருதயுகம் எழுக மாதோ '' என்று புரட்சிக் கவிஞன் பாரதி குரலெழுப் பினனே. அந்த மெய்ப்பொருளைக் காண்ப தற்கு வழி வகுக்கும் சஞ்சிகைகளோ எம் மத்தியில் மிக மிகக் குறைவு. மாறாக கிருத யுகத்தைப் பிரசவிப்பதற்காக மேற்கொள் ளப்படும் வர்க்கப் போராட்டம் என்னும் மருத்துவப் பணியில் இருந்து உழைக்கும் ஏழை மக்களைத் திசை திருப்பி விடுவதற்காக முயற்சிக்கும் '' முற்போக்குச் '' சஞ்சிகை களோ ஏராளம்.

கலியுகம் மேலும் தழைத்தோங்க வேண் டும் என்று பிரார்த்தனை செய்யும் படு பிற் போக்குக் கும்பல்களுக்கு துணை நிற்கும் வகையில் இந்தப் போலி '' முற்போக்கு வாதிகள் '' சிந்திக்கின்றனா. செயற்படு கின்றனர். இவைக்கு இடியேறு போன்று வெளி வந்துள்ளது ''கிருதயுகம்'' எனும் சஞ்சிகை.

இச் சஞ்சிகையின் முதல் பிரதியில் க. வீ. யினுல் இயற்றப்பட்ட அற்புதமான கவியின் ஓர் இடத்தில்,

''மாந்தர் எவர்க்கும் நீதி ஒன்றே ;
மாநிலம் முழுவதும் ஒருலகரசே''

என்று அழகாகக் கூறியுள்ளார். இக்கனவை நனவாக்கும் நோக்குடன் தானே மாமேதை கார்ல் மாக்ஸ்ம் ''உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்'' என்ற கோஷத்தை முன் வைத்தார். இதன்மூலம் கெடுபிடி நிறைந்த கலியுகத்தை நிர்மூலமாக்கி சமாதானமும் சமத்துவமும், தயவும், தாட்சண்யமும், செல் வமும், செழுமையும், கலையும், காவியமும், பூத்துக் குலுங்கும் புதிய கம்மியூனிச சமுதா யத்திற்கு வித்திடும் கிருதயுகம் பிறக்கும் என்ற உண்மையை கார்ல் மாக்ஸ் நிரூபித் துக் காட்டினர். மேலும் அத்தகைய சமூகம் தோன்ற வேண்டியது இயற்கையின் நியதி என்றும் ஆதாரபூர்வமாக எடுத்துக் காட்டி யுள்ளார். கம்யூனிஸ சமுதாயத்தில் தனித் தனி தேசிய அரசுகள் அழிந்துபோகும் என் றும், இறுதியில் க. வீ. தனது கவியில் கூறி யதுபோன்று ''மாநிலம் முழுவதும் ஒருல கரசே'' என்ற நிலையைச் சென்றடையும் என்றும் காட்டியுள்ளார்.

கார்ல் மாக்ஸ் கண்டுபிடித்த இந்த இயற் கையின் நிகழ்வு விதியை அன்று தொட்டு இன்று வரையும் விமர்சிக்கும் திருக்கூட்டம் ஒன்று இருந்தே வந்துள்ளது. தனித்தனி தேசிய அரசுகளற்ற உலக கம்யூனிச் சமூகம் ஒன்று உருவாகும் என்னும் உண்மையை உணர வல்லமை அற்றோரும் கிரகிக்க மறுப் போரும் இக்கருத்தினை ''யூட்டோப்பியா'' அல்லது கற்பனை உலகம் என்று வர்ணிக் கின்றனர். ஏதோ விமர்சிக்க வேண்டும் என்பதற்காக இவ்வாறு கூறிவிடுகின்றனர். வேறும் சிலர் உண்மையில் இந்தத் தத்து வத்தைப் படிக்காமலேயே விமர்சனத்தில் இறங்கிவிடுகின்றனர். இவை போன்ற விமர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகர்களைக் காலப்போக்கின் நிகழ்வுகளை தூலாம்பரமாக எடைபோட்டுக் காட்டி விடுகின்றது. இயற்கையின் போக்கை இவர்களால் தடைசெய்ய முடியாது என்பது தெளிவாகின்றது.

உலகின் மூன்றிலொரு பங்கிற்கும் மேலானோர் இன்று சோஷலிச சமூகத்தினை நிர்மானித்து கம்யூனிச சமுதாயத்தை நோக்கி முன்னேறுகின்றனர். என்னும் உண்மையை இந்த விமர்சகர்கள் காண மறுக்கின்றனர். மேலும் உலகில் நூற்றுக்கு எண்பது விகிதமாகவுள்ள நாடுகள் காலனி ஆதிக்க முறையைத் தகர்த்தெறிந்து சோஷலிசப் புரட்சியை நோக்கி ஏறுநடை போடுகின்றன என்பதையும் இவர்கள் தெரிந்து கொள்ளாமல் இருப்பது விந்தையே. எஞ்சியுள்ள ஏகாதிபத்திய நாடுகளிலும் வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகளிலும் பல தரப்பட்ட முரண்பாடுகளினால் சீர்குலைவு நடைபெற்று வருவதைக் கூட இவர்கள் கவனத்திற் கொள்வதில்லை. எனவே இவர்களின் விமர்சனமோ யதாத்தத்திற்கு அப்பாற்பட்டதும், கற்பனை உலகிலிருந்து சிருட்டிக்கப்படுவதுமாகும் என்பது தெளிவாகின்றது.

கிருதயுகம் தனது புரட்சிப் பாதையில் மேலும் ஓங்கி வளரட்டும் என மனமார வாழ்த்துகின்றேன்.

**பொன். குமாரசாமி**

30-8-1981 செயலாளர், யாழ் மாவட்டக் சமூ
யாழ்ப்பாணம். இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி.

* * *

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற எண்ணக் கருவுடன் ஒரே நீதி ஒரே அரசு என்ற சிந்தனைக் கட்டமைப்புகளை தாங்கி வரும் கிருதயுகமானது தன் இரண்டாவது வெளிப்பாட்டின் அட்டைப்படத்தில் அதனை வலியுறுத்தி வெளிவந்திருப்பதை வாசகர்களாகிய நாம் காணக்கூடியதாக இருந்தது. இச் சஞ்சிகையானது தனது குழந்தைப் பருவத்திலேயே தனது எதிர்கால சிந்தனைகளை இழையோட விட்டுள்ளது. கிருதயுகத்தின் மூன்றும் வெளியீட்டில் வெளிவந்த படைப்புக்களில் அநேகமானவை சிறப்புற அமைந்திருந்தாலும் ''எந்தப் பிறவியில் இவர்கள் இறுப்பார்கள்'' என்ற கவிதை தெட்டத் தெளிவர்கப் பாட்டாளி மக்களின் உட்கிடக்கையை வெளிப்படுத்தி நிற்கின்றது. கிருதயுகம் தனது பாதையில் நின்று பிறழாமல் இருப்பதே, தனது நோக்கை அடையும் ஒரே வழியாகும்.

02-08-81 **நயினை சிறி**

* * *

யாழ் நூலகம் பற்றிய உங்கள் கவிதை எங்கள் இருவரினதும் நெஞ்சைப் பிழிந்தது. இந்த அநியாயங்களுக்கு முடிவே கிடையாதா?

31-8-81 **சின்னத்தம்பி**

* * *

''மன்னிக்கத் தெரிந்த மனிதனின் உள்ளம்'' சிவப்பிரியாவின் சிறுகதை முதிரா இளமையிலும் புது உணர்வு தருகிறது.

23-8-81 **தினகரன்**
(ஞாயிறு வாரமலர்)

* * *

தங்களின் மூன்றாவது மடலில் மேதினம் என்ற தலையங்கத்தின் கீழ் உணர்ச்சி மிக்க கவிதைகளை பிரசுரித்துள்ளீர்கள். இக்கவிதைகள் வீரநடை போடும் தொழிலாளி வர்க்கத்தின் காலடிகட்கு முரசு கொட்டி மேலும் வீரத்தை ஊட்டுமாப்போல் அமைந்துள்ளன.

ஒவ்வொரு வரியும் தொழிலாளியைப் புரட்சிப்பாதையில் இட்டுச் செல்லத் தூண்டுகிறது. சமூக மாற்றத்தில் அவனுக்குரிய தலைமைப் பங்கினை வலியுறுத்துகின்றது. அவனை போராட்டக் களத்திற்குப் பொங்கியெழுந்து போ எனத் தூண்டுகிறது.

பல தொழிலாளர் இக்கவிதையைப் படித்துவிட்டு, இதனை அடுத்து வரும் மேதின விழாவில் பண்ணுடன் பாடுவதற்கு தங்கள் அனுமதியைப் பெறும்படி வேண்டியுள்ளார்கள். எனவே, இக்கவிதையை அடுத்த மேதினத்தில் படிப்பதற்கு அனுமதியை வேண்டுகிறோம்.

**எஸ். விஜயானந்தன்**

1-9-1981 அமைப்பாளர், யாழ் மாவட்ட
யாழ்ப்பாணம். தொழிற்சங்க நடவடிக்கைக் குழு.

* * *

இப்பாடலில் எவ்வித மாற்றங்களும் செய்யாது படிப்பதற்கும் தனியாக மறுபிரசுரம் செய்வதற்கும் எவ்வித ஆட்சேபனையும் இல்லை. **ஆ. ர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'' முதலாளித்துவத்தின் முதல் கரு தோன்றியது முதல் ,அதன் 500 வருடங்களுக்கும் அதிகமான வரலாறு முழுவதிலும் எந்தவொரு நாட்டிலாயினும் ''முதலாளித்துவம் நீடூழி வாழ்க'' என்ற சொற்களை அதரங்களில் அசைத்தவண்ணம் ஒரு நபராவது மரணத்தைத் தழுவியதை முதலாளித்துவ சமுதாயம் கண்டதில்லை. ஆனால் யுத்தத்தின் போது இலட்சக்கணக்கான மக்கள் ''சோஷலிஸம் நீடூழி வாழ்க'' என்ற கோஷத்துடன் மரணத்திற்கும் சித்திரவதைக்கும் முகங்கொடுத்தனர். அக்டோபர் புரட்சியின் ஆதாயங்களைப் பாதுகாப்பதற்காக அவர்கள் அவ்வாறு செய்தனர். மேலும் இந்த ஆதாயங்களை அவர்கள் பாதுகாத்தனர்; வெற்றி பெற்றவர்களாய்த் தோன்றினர்.

எந்தத் தியாகத்திற்கும் ,எந்தவிதக் கஷ்டத்திற்கும் முகங்கொடுக்கும் விருப்பத்திற்கும் ஏதுவாயிருந்தது எது ?அது சோஷலிஸத்தின் சாராம்சத்தில், அதன் பொருளாதார வளர்ச்சி அரசியல், கலாச்சாரம், மனித உரிமைகள் மற்றும் அதிகாரங்களின் சாதனையில் தங்கி உள்ளது.''

—பேராசிரிர் வாதிம் ஜாக்லதின்

---

## மேலேயும் ஒரு பொருள் இருக்கிறது

ஒரு மைம்மல் நேரம். குச்சொழுங்கை. சமூகக் கணிப்புள்ள ஒருவர் கன்னிப் பெண் ஒருத்தியுடன் சல்லாபித்துக் கொண்டிருந்தார். திடீரென அவளின் கன்னத்தில் 'கன்னம்' வைத்துவிட்டார். இந்தக் காட்சியைப் பக்கத்து வளவில் பனைவட்டிலிருந்த சீவல்த்தொழிலாளித் தோழர் ஒருவர் பார்த்து விட்டார்.

அடுத்தநாள் தெருவில் குறிப்பிட்ட பெரியமனிதர் தம் நண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த போது தற்செயலாக எதிர்ப்பட்ட தோழர் அவரைநோக்கி ''இதெல்லாம் சரியில்லாத வேலை'' என்று குறைப்பட்டார்.

பக்கத்தில் நின்ற கவீ. அவர்கள் 'மேலேயும் ஒரு பொருள் இருக்கிறது' என்று சொன்னதுதான் தாமதம் தோழருக்கு ஏற்பட்ட புன்னகையையும் பூரிப்பையும் சொல்லியா தெரியவேண்டும்.

தகவல்: 'எஸ்எஸ'

---

## ''பதிய விட்டெழுப்பும்''

சேர், எனக்குப் பத்திலே வியாழன் வருகிறது. பதியை விட்டெழுப்பும் என்கிறார்களே, என்ன சொல்லுகிறீர்கள் என்றேன்.

தம்பி, பத்தில் வியாழன் பதியை விட்டு எழுப்பும் என்பதல்லப் பழமொழி, யாரும் பதியை விட்டு எழும்பியதாகவும் தெரியவில்லை. பத்தில் வியாழன் பதியவீட்டு, எழுப்பும், என்றுதான் இருக்கவேண்டும் ( ஒருக்கால் இருந்த நிலையில் இருந்து கொஞ்சம் இறக்கி விட்டுப் பின்பு எழுப்பிவிடும் என்பதுதான்கருத்து ) என்று க. வீ. அவர்கள் கூறியபொழுது சோதிடத்துறையிலும் மூலபாடத் திறனாய்வு அத்தியாவசியமானது என எனக்குள் நினைத்துக்கொண்டேன்.

தகவல்— 'எஸ்எஸ்'

---

'' கடவுளை நம்பாதிருந்த நான் கூட 'கடவுளை நம்புகிறவனெல்லாம் முட்டாள்' என்ற பெரியாரின் பொன் மொழியை ஆராயப்போய், கடவுளை ஆதரிக்கிறவனாகவும், மக்களுக்கும் கடவுளுக்கும் இருக்கிற உறவின் மகத்துவத்தை போற்றுகிறவனாகவும் மாற நேர்ந்தது.''

— ஜெயகாந்தன்
'கல்பனா' இதழ் 6—1971



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NEW LANKA ALUMINIUM INDUSTRIES

## NO: 20, ARALY ROAD,

## ODDUMADAM,

## JAFFNA.

★

MANUFACTURERS OF

**PURE GUARANTEED ALUMINIUM WARES.**

அன்பளிப்பு:

"வேல்விலாசன்"

அன்பளிப்பு:

"கண்ணன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலவிதமான
ஒலிப்பதிவு வேலைகளுக்கு
யாழ்நகரில் முன்னணி
ஸ்தாபனம்

★

றேடியோ கசட் வகைகள்
மற்றும் மின்சாரப்
பொருட்களைத் திருத்தவும்
உத்தரவாதத்துடன்
பெற்றுக்கொள்ளவும் உகந்த இடம்

★

# RADIOS PATHY

58, Kasthuriyar Road,
JAFFNA.

TEL: 7805

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org